www.tamilarangam.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆசிரியர் கருத்து


தமிழ்மக்களின் இன்றைய வரலாற்று நெருக்கடியானது முழுக்கமுழுக்க தலைமை நெருக்கடியாகும். தமிழ் மக்களின் தொடர்ந்த தோல்வியின் மத்தியிலே தோற்றுவிக்கப்பட்ட புதிய இயக்கங்களும் வெகுஜனங்களோடு பின்னிப் பிணைந்த இயக்கங்களாக அபிவிருத்தியடையாது போய்விட்டன. இவையெல்லாம் தற்செயலான நிகழ்ச்சிகளாலோ அன்றேல் தமிழினம் புரட்சிக்குத் தகைமையற்ற இனம் ஆதலாலோ அல்ல. தமிழீழக் கோரிக்கை அரசியலின் மேற்பரப்புக்கு வந்த பின்பு, அதை வென்றெடுப்பதற்கென தமிழ் இளைஞர்களின் சிறப்புமிக்க பகுதியினர் பிரதிக்ஞை எடுத்த பின்பே குட்டிமுதலாளித்துவ தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தமிழீழத்தை எடுப்பதற்கு லாயக்கற்றவர்கள் என்பதைக் கண்டு கொண்டனர். அதேபோதில் சோசலிஸ்டுகள் தமிழீழத்தை நிராகரிப்பதில் விருப்பமுடையவர்கள் என்பதையும் இனங்கண்டு கொண்டனர். போர் முனைப்புமிக்க இந்த இளைஞர்களின் ஒரு தசாப்த பிரயத்தனங்களின் பலாபலனைத் தங்களது கம்யூனிச விரோத குறைபாடுகளைக் களைந்து கொண்டனர். கம்யூனிச விரோதத் தன்மையை விட்டதோடு மாத்திரமல்லாமல் தாங்கள் எல்லோரும் சோசலிசத் தமிழீழத்திற்காகப் போராடுகிறோம் என்பதையும் பிரகடனப்படுத்தினர்.

சோசலிசப் பிரகடனத்தை தமிழீழ விடுதலை இயக்கங்களோடு உலகத்திலுள்ள எந்தவொரு சோசலிசக் கட்சியோ அரசாங்கமோ இறுக்கமான ஐக்கியத்தை ஏற்படுத்தவில்லை. அதற்கு ஒரேயொரு காரணம்தான் உண்டு. இந்த விடுதலை இயக்கங்கள் உலகத்திலுள்ள எந்தவொரு சோசலிசக் கட்சியாவது சரியென்று துணிந்து கூறும் நெஞ்சத் துணிவு அற்றே இருக்கின்றன. இந்த இனங்கண்டுகொள்ளமுடியாததும், பக்கமெடுக்க முடியாததுமான தன்மையே தமிழீழ விடுதலைக்கு பரந்துபட்ட சர்வதேச முற்போக்குச் சக்திகளின் உதவி கிட்டாததற்கான காரணமும், பரந்துபட்ட தமிழ் மக்களின் பெரும்பான்மையினர் அது சரியென்று ஏற்றபின்னர் அவ்வியக்கத்தைச் சூழ அணிதிரளாமைக்குரிய காரணமுமாகும்.

EROS, E.P.R.L.F, P.L.O.T போன்றவை சாடைமாடையாக மொஸ்கோ சார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் பக்கம் பவ்வியமாகச் சரிந்து சென்ற போதும், தமிழ் மக்களுக்கு முன்னால் நாம் மொஸ்கோ கம்யூனிஸ்ட் கட்சியோடு ஐக்கியப்படப்போகிறோம் என்று துணிந்து சொல்லாதவர்களாக இருக்கிறார்கள். இதை இவர்கள் வெளிப்படையாகச் சொல்வார்களானால் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியினால் காலாகாலமாகக் காட்டிக்கொடுக்கப்பட்ட கசப்பான அனுபவத்தைப் பெற்ற தமிழ்மக்களிடமிருந்து தனிமைப்படுவது திண்ணம். புலி இயக்கத்தின் தத்துவ ஆசிரியரான A.S. பாலசிங்கம் எழுதிய ஆங்கில வெளியீடுகளில் நாம் மாக்சிச லெனினிச வாதிகளென்றும் சோசலிச சக்திகளோடு ஐக்கியப்பட விரும்புவதாகவும் கூறுகிறாரேயொழிய உலகத்திலுள்ள எந்தவொரு மாக்சிய லெனினிசக் கட்சியாவது சரியென்று திட்டவட்டமாகக் கூறும் அரசியல் நேர்மை அற்றவராகவே இருக்கிறார். இதனாலேயே இவர்களை ஒரு சோசலிசக் கட்சியாவது அங்கீகரிக்காததோடு தமிழ் மக்களும் இவர்களை அடையாளம் கண்டு இவர்கள் பின்னால் அணி திரளாது விட்டார்கள். இந்த வங்குரோட்டுத் தன்மையை அறிந்ததினால்தான் ஜேர்மனிக்குச் [illegible] விஜயம் செய்த தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் திரு அ. அமிர்தலிங்கம் "தம்பிமார் சிலர் இங்கு தமிழீழ சோசலிசப் புரட்சியைச் செய்கிறோம் என்று அறிக்கைவிடுகிறார்கள்." என்று நக்கலும் நையாண்டியும் செய்வதற்கு வழிவகுக்கிறது.

## புத்தாண்டு வாழ்த்து

எண்ணம் வாசகர்களே
புரட்சிக்குத் தயாராக இருக்கும்
தமிழ் மக்களே!
தமிழீழ போராட்டத்தின்
நெருக்கடிமிக்க காலத்தில்
நுழையும் உங்களுக்கு
இப் போராட்டத்தில் வரு
கின்ற விளைவுகளை எதிர்
கொள்ள வல்ல வைராக
கியமும் அரசியல் பரிஞா
னமும் ஏற்பட வேண்டும்
என வாழ்த்துகிறோம்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தோட்டத்தொழிலாளர்

இந்தியாவில் பத்துப்பதினொரு வருடத்திற்கு ஒருமுறை கிரமமாக வரும் பஞ்சம் பசி பட்டினிச் சாவானது இங்கிலாந்தின் தொழிற்துறை நெருக்கடியின் விளைவேயாகும். [ரூசா லுக்சம்பேர்க் தனது நிதிமூலதனத்தின் திரட்சி பக்கம் 286 ஆங்கிலம்] முதலாவது யுத்தத்தின் முந்திய நாட்களின் பொருளாதாரப் பொறிவு நாட்களில் இந்திய உபகண்டத்தில் காலனித்துவத்திற்கு எதிரான சுதந்திரப் போராட்டமானது ஒரு நாளாவது ஓய்ந்தது கிடையாது. இந்தியாவின் எண்ணிக்கையிலும் அனுபவத்திலும் குறைந்த பாட்டாளிவர்க்கத்திற்கு, நிலப்பிரபுத்துவத்தையும் ஆங்கிலோ-இந்திய அதிகாரிகளையும் பிரித்தானிய இராணுவத்தையும் ஒட்டு மொத்தமாக தோற்கடிக்க வேண்டிய பெரிய பொறுப்பு இருந்தது. இந்தப் போராட்டத்தின் போது சர்வதேசிய இலக்கும் சர்வதேசிய பிணைப்பும் இல்லையெனில் போராட்டம் அரை வழிக்குச் சென்று சந்தர்ப்பவாதிகளின் அற்ப சொற்ப சலுகைகளோடு அடங்கி விடுவதாய் இருந்தது. இந்த நேரத்தில் தான் 1917ல் ரஷ்யாவில் அக்டோபர் புரட்சி வெடித்தது. இது காலனித்துவத்திற்கு எதிராகப் போராடும் மக்களுக்குப் புதிய உற்சாகத்தையும், உத்வேகத்தையும் வழங்கியது. 1919ல் லெனின் மூன்றாவது சர்வதேசக் கட்சிக்கான மகாநாட்டைக் கூட்டினார். அந்த மகாநாட்டிலே ரஷ்யாவைப் பிரதிநிதித்துவப் படுத்தும், லெனின், சினொவெவ், புகாரின், ரொஸ்கி, ஆகிய நால்வரும் இந்தியாவைப் பிரதிநிதித்துவப் படுத்தி ஆச்சாரியா, M.N. ROY, செபிக் ஆகியோர் கலந்து கொண்டனர். மகாநாட்டின் தீர்மானங்களில் பின்வரும் தீர்மானம் முக்கியமானதாகும். காலனித்துவ நாடுகளிலுள்ள தேசிய விடுதலைப் போராட்டங்கள், தொழிற்துறை நாடுகளிலுள்ள பாட்டாளி-



[THE PROLETARIAN STRUGGLE WILL ACCELERATE THE NATIONAL LEBERTION STRUGGLE] வர்க்கப் போராட்டங்களை கூர்ப்படையச் செய்யும். தொழிற்துறை நாடுகளிலுள்ள பாட்டாளிவர்க்கப் போராட்டங்கள் காலனித்துவ நாடுகளிலுள்ள தேசவிடுதலைக்கான போராட்டங்களைக் கூர்ப்படையச் செய்யும். இரண்டு போராட்டங்களும் இரண்டு சமாந்தரக் கால்வாய்களால் ஒரே திசையில் பாயும் போராட்டங்களே. அதாவது அவை உலக சோஷலிசப் புரட்சியை முன்னெடுத்துச் செல்வதற்காகப் பீடு நடை போடும் போராட்டங்களே. வயது முதிர்ந்த காலனித்துவ நாடான இந்தியாவில் மூன்றாமகிலத்தின் சகோதர பாட்டாளிவர்க்கக் கட்சியை கட்டி வளர்ப்பது எஞ்ஞான்றும் இரண்டாந்தரப் பிரச்சனையல்ல. பாட்டாளிவர்க்கம் ஆளுமை செலுத்தக் கூடிய கட்சியைக் கட்டி வளர்ப்பதை எஞ்ஞான்றும் ஒத்திப் போட முடியாது.

மூன்றாமகிலத்தின் எண்ணற்ற பகீரதப் பிரயத்தனத்தால் இந்திய உபகண்டத்தில் பாட்டாளி வர்க்க இயக்கங்கள் உருவாகத் தொடங்கின. அந்நாட்களில் மூன்றாமகிலத் தலைமைப்பீடத்திற்கும், இந்தியப் பாட்டாளிவர்க்கத் தலைவர்களுக்குமிடையே நடந்த தந்திகளின் எண்ணிக்கை சாட்சி சொல்லும் மூன்றாமகிலம் எத்தகைய பிரயத்தனத்தை எடுத்ததென்று: இதன் பயனாக 1920லேயே சிலோன் லேபர் பெடரேசன் உதயமானது. வங்காளத்தைப் போன்று ஓர் புரட்சிகர பாட்டாளிவர்க்கக் கட்சி உருவாகும் மட்டத்திற்கு இலங்கையில் வளர்ச்சி காணாவிட்டாலும் இலங்கைத் தொழிலாள வர்க்கம் இரண்டு பெரிய வெற்றிகளை ஈட்டியது.

முதலாவது தான் TRES-PASS-LAW. எல்லை கடக்கும் சட்டம். பிரித்தானிய சிலோனில் எஸ்டேட்டுகளினூடு வெளியார் நடந்து போதல் தடைசெய்யப்பட்டது. இதற்-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கெதிராக சிலோன் லேபர் பெடரேசன் வேலை நிறுத்தப்போராட்டத்தை மேற்கொண்டது. இந்தத் தொழிற் சங்கத்தை அணிவகுக்கும் பொறுப்பையும், தலைமை தாங்கும் பொறுப்பையும் ஏ.ஈ. குணசிங்காவும், நடேஸ்ஐயரும் மேற்கொண்டனர். இந்தப் போராட்டம் தொழிலாளவர்க்கத்திற்குப் புதிய நம்பிக்கையைக் கொடுத்தது மட்டுமல்லாமல் ஸ்தாபனப்படுவதால் திரளும் சக்தியையும் விளங்கிக் கொண்டனர். இந்தப் போராட்டங்கள் நடந்து கொண்டிருந்தபொழுது தான் பாட்டாளி வர்க்கம் ஏறத்தாழத் தொழிற்சங்கரீதியில் அணிவகுக்கப்பட்டது. ஏற்கனவே அணிவகுக்கப்பட்ட தொழிற் சங்கங்கள் கெட்டியாகியும், அரசியல் முன்னேற்கையும் பெற்றன.

சிலோன் லேபர் பெடரேசன் எல்லை கடத்தல் சட்டத்தை வெற்றிபெற்ற ஒரு வருடத்திற்குள்ளேயே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உருவாகியது. லெனினது பிரயத்தனங்களின் பலாபலன் லெனின் மரணமெய்திய ஒரு வருடத்திற்குள்ளேயே அதாவது 1925ம் ஆண்டே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மூன்றாம் அகிலப் பாட்டாளிவர்க்கக்(PROLETARIAN)கிளைக்கட்சியாக உருவாகியது.

சிலோன் லேபர் பெடரேசனின் அபிவிருத்திகளும் நிகழ்வுப்போக்குகளும் மூன்றாம் அகிலத்தின் அரசியல் வேலைத்திட்டத்தோடு பின்னிப்பிணைந்தே சென்றது. மூன்றாம் அகிலத்தை ஆரம்பித்ததன் பின் லெனின் உயிரோடிருந்த 5 வருடங்களிலும் அவர் மரணமாகி மூன்றாம் அகிலம் உக்கி உருக்குலைந்து கொண்டு போகும் அந்த எதிர்ப்புரட்சி அலையிலேதான் இலங்கைத் தோட்டத் தொழிலாளர்களது போராட்டங்களும் காட்டிக் கொடுக்கப்பட்டுக் கொண்டு வந்தது. வெறுமனே இலங்கைப் பாட்டாளி வர்க்கம் மாத்திரம் காட்டிக் கொடுக்கப்பட்டு செல்லவில்லை.



உலகபாட்டாளி வர்க்கம் காட்டிக்கொடுக்கப்பட்டு சென்றபொழுது அதன் பகுதியான இலங்கைப் பாட்டாளி வர்க்கமும் காட்டிக்கொடுக்கப்பட்டுக் கொண்டு சென்றது.

சிலோன் லேபர் பெடரேசனின் அடுத்தகட்ட அபிவிருத்தி தான் ஏ.ஈ. குணசிங்கா நடேஸ்ஐயர் சகாப்தத்தின் முடிவும் என்-எம் பெரேரா சகாப்தத்தின் தொடக்க காலமும் ஆகும். என்-எம்-பெரேரா தனது பொருளாதார கலாநிதிப்பட்டத்தை முடிக்கவும் முதலாம் உலகயுத்தத்தை அடுத்த பொருளாதார செழுமைக்காலமும் முடிவுற்றது. இரண்டாம் உலகயுத்தத்திற்கு முந்திய கால முதலாளித்துவப் பொருளாதார நெருக்கடி பாய்ச்சலில் வளரவே என்-எம்-பெரேரா மார்க்சிய பொருளாதார ஆய்வுமுறையை ஏற்க வேண்டியவரானார். இதுவும் தற்செயலான நிகழ்ச்சியாக இருக்கவில்லை. மூன்றாம் அகிலத்தின் அங்கத்தவரான பொம்பேயைச் சேர்ந்த [BOMBAY] தோழியர் சேர்லியின் தலையீட்டால் என்-எம்-பெரேரா மார்க்சிய இயக்கத்தில் சேர்ந்து கொண்டார். தோழியர் சேர்லியை என்-எம்-பெரேரா மணம் முடித்ததோடு உலக மார்க்சிய இயக்கத்திற்கு அறிமுகமானார்.

இந்த நாட்களிலேயே பிரித்தானியா ஏகாதிபத்தியம் இந்திய உபகண்டத்தை துண்டு போடும் சதியைச் செய்து முடித்துவிட்டது. நிர்வாக அதிகாரிகளில் ஒருவரை இலங்கைப்பிரஜையாக ஏற்படுத்துவதால் இலங்கைப் போராட்டங்களைச் சமரசப்படுத்தும் மூலோபாயத்தை மேற்கொண்டிருந்தது. மக்கள் பிரதிநிதிகள் சபைக்குரிய தேர்தலில் [CIVIL-STATUS] பிரஜாஅந்தஸ்து உடையவர்களுக்கு மாத்திரம் வாக்குரிமை அளிக்கப்பட்டது. ஏ.ஈ. குணசிங்கா, நடேஸ் ஐயர்-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போன்றோர் சர்வஜன வாக்குரிமைப் போராட்டத்தை சிலோன் பெடரேசன் மூலம் நடாத்தினர். சர்வஜன வாக்குரிமையை சேர்.பொன். இராமநாதன் மூர்க்கத்தனமாக எதிர்த்தார். என்.எம். பெரேரா சிலோன் லேபர் பெடரேசன் உடன் தன்னைக் கரைத்துக் கொண்டார். இலங்கையில் சர்வஜன வாக்குரிமைப் போராட்டத்தில் வெகுஜனங்கள் கலந்து கொண்ட போதிலும் - அதன் முதுகெலும்பாக விளங்கியது சிலோன் லேபர் பெடரேசனே. ஏ.ஈ. குணசிங்காவிற்கும் ஆங்கில சிலோன் அதிகாரியான சேர்.பொன் இராமநாதனுக்கும் இடையே ஏற்பட்ட முரண்பாடு சர்வஜனவாக்குரிமைக்கும், சர்வஜனங்களுக்கும் வாக்குரிமை வழங்கக்கூடாதென்றதற்கும் இடையே ஏற்பட்ட முரண்பாடேயொழிய இன்றைய சிங்கள இனவாதத்தை தமிழ் இனவாதத்தால் சமரசப்படுத்த முயற்சிப்பவர்கள் வியாக்கியானப்படுத்துவது போல சிங்களவனுக்கும் தமிழனுக்கும் இடையே ஏற்பட்ட முரண்பாடல்ல. ஏ.ஈ. குணசிங்கா மரணமாகவே என்.எம். பெரேரா அரசியல் வானில் தோற்றமெடுத்தார். இதனை மற்றுமொரு நிகழ்ச்சி நடைபெற்றது. சிலோன் லேபர் பெடரேசன், இலங்கையில் அத்திவாரத் தொழிலாளர் இயக்கம், சமசமாஜக்கட்சியாக உருமாற்றம் அடைந்தது. இந்த நிகழ்வுப் போக்கு எவ்வாறு ஏற்பட்டதென்பதை விளங்க வேண்டுமானால் அப்பொழுது சர்வதேச அரங்கில் நடைபெற்ற அரசியல் மாற்றங்களையும், இந்திய உபகண்டத்தில் நடந்த அரசியல் மாற்றங்களையும் வரிசைக்கிரமமாக கற்றுணர்தல் அவசியமாகும்.

மூன்றாம் அகிலத்தின் தலைமையிலிருந்து ஸ்டாலின் கீழைத்தேய நாடுகளுக்குக் குறிப்பாக-



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு பின்வரும் அறிவுறுத்தலை விடுத்தார். THE COMMUNISTS MUST PASS FROM THE POLICY OF A UNITED NATINAL FRONT....TO,THE POLICY OF A REVOLUTIONARY BLOC BETWEEN THE WORKERS AND PETTYBOURGEOISE. IN SUCH COUNTRIES THIS BLOC CAN ASSUME THE FROM OF A SINGLE PARTY, A WORKERS AND PEASANTS PARTY, AKIN TO THE KUOMINTANG.....

[STALIN - PROBLEMS OF LENNISM PAGE-264]

கம்யூனிஸ்ட்டுக்கள் ஐக்கிய தேசிய முன்னணிக் கொள்கையிலிருந்து தொழிலாளர்களும் குட்டி முதலாளிகளும் சேர்ந்த புரட்சிகரக் குழாம் என்ற கொள்கைக்கு மாற வேண்டும். இந்த நாடுகளில் அந்தக் குழாமானது ஒரேயொரு கட்சியாக, தொழிலாளர், விவசாயிகள் சேர்ந்த கட்சியாக கோமின்டாங்கைப் போன்று மாற வேண்டும்.

[ஸ்டாலின் - லெனினிசத்தில் உள்ள பிரச்சனைகள் - ஆங்கிலப் பதிப்பு பக்கம் 264]

மூன்றாம் அகிலத்தலைமையின் அறிவுறுத்தலின் பேரில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி காங்கிரசோடு சேர்ந்து இரண்டறக் கரைந்தது. காங்கிரசுக்குள்ளேயிருந்த சோசலிசக் கன்னைத் தலைவர்களான சுபாஸ் சந்திரபோஸ், ஜவகர்லால் நேரு, சுப்பிரமணியபாரதி போன்றோர், மூன்றாம் அகிலத்தின் அங்கத்தவர்களாகும். பாரதியின் எழுத்துக்களோடு பரிச்சயம் ஆனவர்களும், நேரு எழுதிய "வியக்கத்தக இந்தியா" என்ற புத்தகத்தில் லியோன் ரொக்சி பற்றிய மேற்கோள் காட்டுமிடங்களை அவதானிப்பவர்களும், M.N.ROY, டாங்கே, போன்றோரின் புத்தகங்களை வாசிப்பவர்களும் இதைப் புரிந்து கொள்வர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேலும் M.N. ROY, டாங்கே போன்றோர் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தினால் சிறைப்பிடிக்கப்பட்டதனாலும் சிறைப்பிடிக்கப்பட்ட பொழுது மூன்றாமகிலச் சகோதரக் கட்சிகள் ஒன்றும் குரல் கொடுக்கத்தவறியதாலும் குறிப்பாகப் பிரித்தானியக் கம்யூனிஸ்கட்சியோ, லேபர் கட்சியோ ஒரு சின்னவிரலைத்தன்னும் உயர்த்தாததனாலும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி லேபல் இல்லாது போகவே காங்கிரஸ் இராட்சத வடிவை எடுத்தது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைக் கட்டி வளர்க்க லெனின் எடுத்த பிரயத்தனங்கள் வீணாயின.

இந்த வரலாற்று ஓட்டத்தின் மத்தியிலே 1938 ல் நான்காவது சர்வதேச பாட்டாளி வர்க்கக்கட்சி ஆரம்பிக்கப்பட்டதோடு இந்தியாவிலும் பொம்பேயிலே தோழியர் செர்லி பெரேரா போன்றோரால் சமசமாஜக் கட்சி ஆரம்பிக்கும் வரை ஒரு சுயாதீனமான தொழிலாள வர்க்கக்கட்சி நிலவவில்லை. யுத்தகாலப் பெருங்கஷ்டத்தின் மத்தியில் நான்காம் அகிலத்தால் இந்திய உபகண்டக் கட்சியாகத் தோற்றுவிக்கப்பட்ட சமசமாயக்கட்சி எவ்வாறு லங்கா சமசமாயக்கட்சியாக மாறிய வரலாற்றை அறிந்தவர்கள் துரோகத்தின் தொடக்கத்தின் அடிச்சுவட்டைக் கண்டு கொள்வர்.

சமசமாயக்கட்சியின் புதிய தலைமைகளை இந்திய உபகண்ட தொழிலாளவர்க்கம் அமிலப் பரிசோதனை செய்து அங்கீகரிக்கு முன்னரே இந்தியா சுதந்திர போர்க்கோலத்தைப் பூண்டு விட்டது. பொம்பேயிலே, கல்கத்தாவிலே சமசமாயக்கட்சி பாரிய வளர்ச்சி பெறவில்லை. இலங்கையில் லேபர் பெடெரேசனை சமசமாயக்கட்சிக்குள் சங்கமமாகியதால் இலங்கையில் சமசமாயக் கட்சி பாரிய வளர்ச்சியைக் கண்டது.



இந்தியாவில் பிரித்தானியா ஏகாதிபத்தியத்தின் ஒவ்வொரு அட்டூழியங்களுக்கும் சிலோன் லேபர் பெடரேசனும், சமசமாயக்கட்சியும் வேலைநிறுத்தப் போராட்டங்களால் பதிலடி கொடுத்தன. சமசமாயக்கட்சியின் புரட்சி மையம் இலங்கைக்கு நகர்ந்தது. பிரித்தானியப் பெருங்கடற்படைத்தளம் அமைந்திருக்கும் இலங்கையில் இப்பேற்பட்ட தொழிலாள வர்க்கப் போராட்டங்கள் வெடிப்பது பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்குப் பெரும் தலையிடியைக் கொடுத்தது.

இந்நாட்களில் ஸ்டாலினது சமாதான சகவாழ்வுக் கொள்கைக்கு மாறாக இந்தியாவின் புரட்சிக் கொள்கை உக்கிரமடைந்து கொண்டு சென்றது. பொம்பே, கல்கத்தா, கொழும்பு துறைமுகங்கள் வேலைநிறுத்தத்தில் குதிப்பதும், எழுவதுமாக இருந்து கொண்டிருந்தன. சந்திரபோசின் ஆயுதக்கிளர்ச்சிக்கான தயாரிப்புகள் அடுத்த பக்கத்தில் நடந்து கொண்டிருந்தன. இந்திய காங்கிரசின் சத்தியாக்கிரகப் போராட்டம் பர்மா, இலங்கை, நேபாளம், ஈறாக வியாபித்திருந்தன. பிரித்தானியாவின் பெரிய காலனியான இந்தியா இந்தாபிடி விழுகிறேன் என்று கொண்டிருந்தது. இந்த அரை நூற்றாண்டு முழுவதும் இலங்கையில் வேறெந்தக்கட்சியும் இருக்கவில்லை. திலகர், காந்தி-பட்டேலின் காங்கிரசே இலங்கையிலும் பெரிய கட்சியாகவும் இருந்தது. சிங்களவர்களும், தமிழர்களும் காங்கிரசிலேயும், சமசமாயக்கட்சியிலேயுமே அங்கத்தவர்களாக இருந்தனர். சமசமாயக்கட்சியும் இந்திய உபகண்டக்கட்சியாகவே இருந்ததேயொழிய இலங்கைக்கான கட்சியாக இருக்கவில்லை. இலங்கைமக்கள் எவரும் இந்தியாவிடமிருந்து பிரிந்து இலங்கைக்கு சுதந்திரம் கேட்கவில்லை. ஜின்னா பாகிஸ்தானைப் பிரித்துத் தரும்படி கேட்டதைப்போல இலங்கையின் எந்தத் தலைவரும் இந்தியா-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடமிருந்து பிரித்துச் சுதந்திரம் கோரியது கிடையாது.

பிரித்தானிய ஏகாதிபத்தியம் கிழக்காசியாவிலுள்ள தனது பெரிய கடற்படைத்தளமான திருகோணமலையை எஞ்ஞான்றும் இழக்க விரும்பவில்லை. யுத்தத்திற்காக திருகோணமலையிலிருந்த பிரித்தானிய கடற்படை முழுவதும் ஐரோப்பாவிற்கு நகர்த்தப்பட்டு அழியவே, மீண்டும் இந்திய உபகண்டத்தை இராணுவ அடக்குமுறையால் கட்டுப்படுத்துவது இயலாமல் போகவே தனது பலவீனத்தைக்கண்ட பிரித்தானிய ஏகாதிபத்தியம் இந்திய உபகண்டத்திலுள்ள ஏகாதிபத்திய விரோதக்கிளர்ச்சிகளை முடிவுக்கு கொண்டுவர நிர்ப்பந்திக்கப்பட்டது. இந்தியாவிற்கு முழுமையான சுதந்திரம் கொடுத்தால் மீண்டும் இந்தியாவை முழுமையாகவே இழக்க வேண்டிவரும் என்பதைக் கருத்தில் கொண்டு, இந்திய உபகண்டத்தைப் பிரித்து, பிளந்து, சுதந்திரம் வழங்கும் மூலோபாயத்தை வகுத்தது.

இந்தச் சாதகமான காங்கிரசின் குட்டி முதலாளித்துவத் தலைமை தமக்குள்ளேயிருந்த உள்முரண்பாட்டை தீர்க்காது அமைந்திருந்தது. காங்கிரசுக்குள்ளேயே இந்துமகாசபா, முஸ்லீம்லீக், பௌத்தமகாசபாக்களுக்குப் பிரபலிக்கம் கொடுக்கத் தலைப்பட்டது. பர்மாவிலும், இலங்கையிலுமுள்ள பௌத்தமகா சபாக்கள் காங்கிரசோடு ஒப்பு நோக்குமிடத்துச் சிறியனவாக இருந்ததால் இவைகளுக்கிடையே பெரிய முட்டிமோதல்கள் ஏற்படவில்லை.

சுதந்திரம் கொடுக்குமிடத்துப் புதிதாக பிறக்கவிருக்கும் குழந்தை இந்திய அரசாங்கத்தை மற்றைய ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாக்கவென்று தொடர்ந்து பிரித்தானியகடற்படைத்தளத்தை திருகோணமலையில் வைத்திருப்பதற்கு ஒத்துக்கொள்ளப்பட்டது



இலங்கையின் கடற்படைக் கேந்திர முக்கியத்துவத்தினையும் மதத்தையும் புவி இயலையும் காரணம் காட்டி இந்தியாவிற்கு முதலிற் சுதந்திரம் வழங்குவதென்றும், இலங்கைக்கு சுதந்திரம் வழங்குவதைச் சிறிது பின்போட்டு யோசிக்க வேண்டுமென்றும், காங்கிரசிற்கும் பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்குமிடையே இடைத்தீர்வு ஏற்பட்டது. இந்தியாவின் சட்டங்களும் சரத்துக்களும் இலங்கைக்கு செல்லுபடியாகாதென்று பிரகடனப்படுத்தப்பட்டது.

பிரித்தானிய ஏகாதிபத்தியம் இலங்கையில் காங்கிரசையும் சமசமாயக்கட்சியையும் கலைக்கச் சதி செய்து கொண்டிருந்தது. சோல்பரி பிரபு என்.எம்.பெரேராவிடம் இலங்கையில் தேர்தல் முறையிலான பாராளுமன்ற அமைப்பு முறையை ஏற்றுக் கொள்கிறீரோ என்று கேட்டபொழுது என்.எம். பெரேரா வாயெல்லாம் பல்லாகி ஏற்றுக் கொண்டார். அப்போது அடுத்த நிபந்தனையும் விதிக்கப்பட்டது. இந்தியக்கட்சிகள் இலங்கைச் சட்ட விரோதமானவை ஆதலால் சமசமாயக்கட்சியைக் கலைக்கும்படியும் வேண்டப்பட்டது. என்.எம்.பெரேரா தன்னுடைய கட்டுப்பாட்டிலுள்ள இலங்கைப் பகுதிக்கு 'லங்கா சமசமாயக்கட்சி' எனப் பெயரைச் சூட்டினார். 'லங்கா சமசமாயக்கட்சி'யின் துடிப்புள்ள பகுதியினர் சிலோன் லேபர் பெடரேசனை தவிர வேறொன்றும் இல்லை. மார்க்சியவாதிகள் எப்போதோ தூக்கியெறிந்த தேசியவாதம் என்ற பேயிசப் பாத்திரத்துள் லங்கா சமசமாயக்கட்சி புகுந்து கொண்டது. நான்காம் அகிலத்தின் தலைமைச் செயலகமாக விளங்கிய ஐக்கிய செயலாளர் குழுமமும் UNITED SECRETARIAT] பிரித்தானிய சாம்ராச்சியச் சட்டத்தின்கீழ் இலங்கை எல்லைக்குள் கட்சியைத் தொடங்குவிக்கும்படி அறிவித்தது. அறிவித்தவுடனேயே நான்காம் அகிலத்தின் சர்வ–



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேசிய வாதம் தாரைவார்க்கப்பட்டுத் தேசிய வாதம் என்று விஷவிதை தூவப்பட்டது.

யுத்தத்தினுள்ளே தொழிலாள வர்க்கத்தின் துடிப்புள்ள பகுதி அழிந்ததாலும், யுத்தத்தைத் தொடர்ந்த பொருளாதார செழுமைக் காலம் தொடங்கியதாலும் நான்காம் அகிலத்தில் தத்துவமுரண்பாடு பொங்கி வழிந்தது. நான்காம் அகிலம் உலகளாவப்பிளவுபட்டது, N.M. பெரேராவினதும் ஐக்கிய செயலாளர் குழுமத்தினதும் துரோகத்திலிருந்து பிரிந்து லெஸ்லி குணவர்த்தன, கொல்வின் ஆர்.டி. சில்வா, பாலாதம்பு போன்றோர் தொடர்ந்து நான்காம் அகிலத்தின் கிளைக்கட்சியாக ஐக்கிய இந்திய உபகண்டக் கட்சியான இந்திய போல்சவிக் லெனினிசக் கட்சியைத் தோற்றுவித்தனர். இவர்கள் இலங்கையில் சுதந்திரமாக இயங்கமுடியாத காரணத்தால் சிறைப்பிடிக்கப்பட்டும் இந்தியாவில் தலைமறைவாகவும் செயல்பட்டனர்

யுத்த காலத்தில் இருநூறுக்கும் மேலான வேலைநிறுத்தங்களை லங்கா சமசமாயக்கட்சியின் ஆதிக்கத்தின் கீழ் இருந்த லேபர் பெடெரேசன் செய்தனர். இந்தப் போராட்டங்களின் போது நடேஸ் ஐயரினதும், என்.எம். பெரேராவினதும் புகழ் கொடிகட்டிப்பறந்தது. நடக்கவிருந்த முதலாவது தேர்தலில் சமசமாயக்கட்சி ஆட்சியைக்கைப்பற்றுவது சந்தேகத்திற்கு அப்பாலானதொன்றாக இருந்தது.

இலங்கையில் ஒரு தங்கப்பவுண் அதாவது ¼ அவுன்ஸ் தங்கம் 10ரூபா பெறுமதியென்று வரையறுக்கப்பட்ட புதிய நாணய முறை அறிமுகப்படுத்தப்பட்டது. அப்பொழுதே தோற்றுவிக்கப்பட்ட சர்வதேசநாணய சபையிலிருந்து இலங்கைக்கு போதிய மானியம் இறைக்கப்பட்டு இலங்கையின் வாழ்க்கைத்தரம் உயர்த்தப்பட்டது. ஆகவே மக்கள் பஞ்சம், பசி, தலைவிரித்தாடும் இந்தியாவோடு இணைந்திருக்க விருப்பமற்று இருந்தனர்.



அன்று இந்தியாவில் நிலவிய பஞ்சம், பசி, பட்டினி காரணமாக இந்திய மக்கள் சாரைசாரையாக இலங்கைக்குக் குடிபெயர்ந்தனர். பிரதமராக வருவதற்கு பகற்கனவு கண்டு கொண்டிருந்த என்.எம். பெரேராவிற்கு இது பீதியைக் கொடுத்தது. தொழிலாளவர்க்கத்திற்கு தாய் நாடோ, தந்தை நாடோ, தேசிய எல்லைகளோ, இல்லையென்ற மார்க்சிய மூலதர்மம் காற்றில் பறந்தது. N.M பெரேராவும், பிலிப் குணவர்த்தனவும், இலங்கையின் பொருளாதார நிலையை ஸ்திரப்படுத்தவென்று கோரி புதியதோர் பிரேரணையைக் கொண்டு வந்தனர். அது தான் இந்தியரையகற்றும் பிரேரணை. [DE-INDIANISATION] LAW] அது தான் வம்சா வழியில்லாத இந்தியர்களும், புதிதாகக்குடியேறிய இந்தியர்களும், மீண்டும் இந்தியாவிற்குத் திருப்பி அனுப்பப்பட வேண்டும். இந்தத் துரோகமே 1948ல் ஒரு துவக்குச்சூடு இல்லாமல் பிரஜா உரிமை பறிப்பதற்குச் சாதகமாக அமைந்தது. இந்தப் பிலிப் குணவர்த்தன சிறிமா அரசாங்கத்தில் இருந்ததினால்தான் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் ஏற்பட்டது.

என்.எம். பெரேரா தோற்கடிக்கப்பட்ட விதம் அடுத்ததோர் அரசியல் அனுபவமாகும். பிரித்தானிய ஏகாதிபத்தியம் வெகுஜனப்பிரபலிக்கம் வாய்ந்த காங்கிரசைக் கலைக்கக் குள்ளவழி வகுத்தது. காங்கிரசின் முக்கிய பிரமுகரான F.R. சேனநாயக்காவை அழைத்து பௌத்த இந்து, முஸ்லீம் கிறிஸ்தவர்களைக்கொண்ட ஐக்கிய தேசியக்கட்சியை ஏற்படுத்தும்படியும், காங்கிரசைக் கலைக்கும்படியும் பிரயத்தனம் எடுத்தனர். காங்கிரசைக் கலைக்க வேண்டாம் என்று ஜீ.ஜீ. பொன்னம்பலம், குமாரசாமி போன்றோர் பகீரதப்பிரயத்தனம் எடுத்தனர். பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் பிரச்சார பலத்தாலும் காசு இறைப்பினாலும், செயற்கை விளம்பரத்தாலும் மகாத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

மா காந்தியின் சுதந்திரம் கிடைத்தபின் காங்கிரசைக் — கலைத்தம்படி வேண்டியதும் சாதகமாக அமையவே ஐக்கிய தேசியக் கட்சி பிரபலிக்கம் பெற்றது

இந்திய காங்கிரஸ் சுதந்திரமற்ற இலங்கைக்-தச் சட்டவிரோதமாகவே திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம் காங்கிரசுக்த அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் என்று பெயர் வைத்தார். இது காங்கிரசின் இந்திய உபகண்ட சர்வவியாபகத்தை தாரைவார்த்ததோடு-இலங்கையில் முதலாவது இனவாத கட்சியை ஏற்-படுத்திய கைங்காரியத்தைச் செய்ததாகவும் அமை-ந்தது.

மற்றைய சம்பவம் தான் யுத்தத்தின் பின் நாட்களில் ஸ்டாலினுக்தும் பிரித்தானிய ஏகாதிபத்-தியத்திற்தும் இடையில் ஏற்பட்ட ஐக்கியத்தின் விளைவாக இலங்கையில் நான்காம் அகிலக்கட்சி-யான சமசமாயக்கட்சியை தோற்கடிக்தும் முகமாக 1946ம் ஆண்டு ஸ்டாலினிசக் கட்சியான இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தோற்றுவிக்கப்பட்டது. இது 1947 இல் நடைபெற்ற முதலாவது பொதுத் தேர்தலில் தென்னிலங்கையில் ஐக்கிய தேசியக்கட்சியுடனும் தமிழ்ப்பிரதேசங்களில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசுடனும் கூட்டுச் சேர்ந்து சமசமாயக் கட்சியைத் தோற்கடித்தது.

இக் கட்டுரை எண்ணத்தின் கொள்ளளவு பற்றுமையால் மீண்டும் தொடரும் என்பதை அறியத்தருகிறோம்.



# மாவட்டசுயாட்சியை நிராகரி ஆட்சியைக்கைப்பற்றதயாரி




"பாண்டவர் ராஜ்ஜியத்தை திருப்பிக் கொடுக்கவேண்டும் துரியோதனா! தர்மத்தின் அறநெறிபடைத்தவர்கள் வீற்றிருக்கும் இச் சபையிலே பாண்டவர் ராஜ்ஜியம் மறுக்கப்படுதல் தர்மமாகாது". "பாண்டவர் சார்பாக தூதுவந்ததே எனக்கு வருத்தம். உம்முடைய அறிவுரைகள் எனக்குத் தேவையில்லை" என்ற துரியோதனனைப் பார்த்து " பாதி ராஜ்ஜியமாவது வேண்டும்" இறுதியில் ஐவருக்கும் ஐந்து ஊரேனும் கிருஷ்ணன் கேட்கிறான். "ஈ இருக்கும் இடந்தானும் பாண்டவர்களுக்கு கொடுக்க முடியாதென்று" சொன்ன துரியோதனனைப் பார்த்து " துரியோதனா! பாண்டவர்கள்

www.tamilarangam.net

இத்தனைக்கும் என்னைத் தூதுவனாக அனுப்பியது தர்மம் நிலைக்க வேண்டுமென்பதற்காக, நீதி நிலைக்கவேண்டுமென்பதற்காக. அதுவே அழிந்து அதர்மம் தலைவிரித்தாடுமானால், அந்தத் தர்மத்திற்கே சோதனை ஏற்படுமானால் யுத்தத்தை ஏற்கத் தயாராக இருக்கின்றார்கள். இதுவே பாண்டவர்களின் முடிவு. உன் அகம்பாவமும் அக்கிரமமும் அழியட்டும் யுத்தத்திற்கு நீ துணிந்தபின் இனி என்ன பேச்சு. சந்திப்போம் களத்தில்" என்று யுத்தப் பிரகடனம் செய்து விட்டு, அரண்மனையை விட்டு வெளியேறினான் கண்ணன்.

மகாபாரதத்தின் துல்லியமான இந்த நிலைப்பாடு போதுமானதாகும் பண்டைய தமிழ் மக்கள் எந்த மட்டத்திற்கு அரசியல் செய்தார்களென்று. தமிழில் தோன்றிய கலை இலக்கியங்களும், இதிகாசங்களும், புராணங்களும் அறிவுறுத்தும் தர்மக் கருத்துக்களும் அதற்குப் பங்கம் ஏற்படும் போது நடக்கும் யுத்தங்களும் எம்மை எந்த நிலைப்பாட்டிற்கு போகவேண்டுமென அறிவுறுத்துகின்றன. அதாவது தமிழீழப் பிரச்சனை குறித்து எந்த நிலைப்பாட்டிற்கு போக வேண்டுமென்பதை திட்டவட்டமாக "பாசறையின் பக்கம்" தான் உனது தலைவிதி என்று திரும்ப திரும்ப அறிவுறுத்துகின்றன.

பல தசாப்தங்களாக பேசிப் பேசி அலுத்துவிட்ட தமிழ்மக்களுக்கு புதிதாக ஒரு பேச்சு வார்த்தை புத்தம் புதிய கொப்பியுடன் புதுவருட வெளியீடாக முற்றிலும் மாறுபட்ட பாணியில் "மாவட்ட சுயாட்சி" என்ற பெயரில் வெளிவருகின்றது. இதன் மூலம் தமிழ் மக்களின் புரட்சி முனையை மழுங்கடித்து J.R இன் ஆட்சியை நிலைக்கவைக்க கிடைத்த தந்திரோபாயமாக பாவிக்கின்றனர்.

வணபிதாக்களும், விரிவுரையாளர்களும், மாணவர்களும் பிடிபட்டவுடன் இனி அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தை இல்லை என்று சொன்னவர்கள் J.R அணிசேரா மாநாட்டிற்கு சென்று திரும்பு முன்னரே J.R உடன் பேச்சு வார்த்தைக்கு கொழும்பில் தயாராகி விட்டனர். பல தசாப்தங்களாக ஆளும் முதலாளித்துவத்தின் சுரண்டலுக்கும், ஒடுக்குமுறைக்கும் இடையே நெரிபட்ட தமிழ் மக்கள் சரியான தலைமையின்றி ஆட்சியாளரின் அடிமைச் சாதனங்களாக மாற்றப்பட்டு விட்டனர். இன்று அடிமைகளாக இருக்கின்



றோம் என்றாலும் அரசும் ஆயுதப்படையும் கொல்லாமல் விடப் போவதில்லை.

இதைத்தான் மார்க்ஸ் "ஒடுக்கப்படும் மக்கள் தங்களது சந்தர்ப்பவாத தலைமையை இனங்கண்டு தூக்கி எறியாவிடில், சரியான தலைமையை உருவாக்காவிடில் ஒருபோதும் விடுதலை நிதர்சனமாகிவிடாது" என்று குறிப்பிடுகின்றார். இன்றுவரை தமிழ் மக்களின் அழிவுக்கும், இழப்புக்கும், எரிப்புக்கும் தமிழ் மக்களின் தலைமையே காரணமென்பதை அறியச் சக்தியற்ற தமிழர்களால் விடுதலை என்னும் அர்த்தத்தின் புனிதத் தன்மையை விளங்கிக் கொள்ள முடியாது.

இந்திய உபகண்டத்தில் எழும் நெருக்கடிகளும், உலகப் பொருளாதார நெருக்கடிகளும் அனுபவப் பரீட்சைக்கு சவால் விடும் இன்றைய மோசமான இக்கட்டான நிலைக்கு மத்தியில் J.R இற்கும், இந்திரா காந்திக்கும் தமிழ் மக்களின் மேல் சிறு பார்வை திரும்பத் தான் செய்கின்றது. இவ்விரண்டு பேரினதும் பார்வையில் வித்தியாசம் உண்டு. இலங்கைக்கு வைன்பேக்கர் விஜயமும், பாகிஸ்தானின் இரண்டாயிரம் இராணுவத்தினர் திருகோணமலையை புவியியல் ரீதியாக பார்வையிட்டதும், தாட்சரிடமிருந்தும், சியாவுல் ஹக்கிடமிருந்தும் நவீன ஆயுதங்களுடன், கவச வண்டிகள் இறங்குவதும், "தமிழர்கள் சண்டைக்குத் தயாரானால் எமக்கு ஒரு வல்லரசு உதவி செய்யும்" என்ற சிறில் மத்தியூவின் சவாலும் நாம் எவ்வாறு அணுகவேண்டுமென்பதை அச்சுறுத்துகின்றன. ஸ்ரீலங்கா அரசு போராட்டத்திற்கு தயார் அத்துடன் மேலும் தயாரித்துக் கொண்டிருக்கின்றது. J.R தனது தயாரிப்புக்கு ஏதுவான ஒரு திட்டத்தை கைங்காரியமாகச் செய்யத்தான் போகின்றார். தமிழ் மக்களை ஒட்டுமொத்தமாக புதைப்பதற்கு ஒரு சவக்குழி தேவை. அதுதான் "மாவட்ட சுயாட்சி".

இந்திரா காந்தியாலும், J.R ஆலும், அமிர்தலிங்கத்தாலும் கூட்டாக சேர்ந்து மாவட்ட சுயாட்சி கிடைத்தால் அங்கு என்ன நடக்கும். இதுதான் இன்று தமிழ் மக்கள் எதிர்நோக்கியுள்ள கேள்வி? ஏற்றுமதி இறக்குமதி நமது கைக்கு வந்துவிடுமோ? அன்றேல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ் மக்கள் எல்லோருக்கும் வாழ்க்கைத் தரம் உயர்ந்து விடுமா? தொழிற்சாலைகள் போடப்படுமா? கல்வியும் முன்னேற்றமாயிருக்கும் வீதிகள் திருத்தப்படுமா? ஆஸ்பத்திரிகள் கட்டப்படுமா? நோய்வாய்ப் பட்டு அவதியுறும் மக்களுக்கு நிவாரணம் கிடைத்துவிடுமோ? இன்று இலி கொண்டிருக்கும் தமிழ் மக்களை பாதுகாக்க, இவற்றிற்கெல்லாம் பதில் அளித்துவிட்டால் இவற்றை நிறைவேற்றமுடியுமென்றால் அந்த மட்டத்தில் அது சரி. இல்லையேல் மாவட்ட சுயாட்சி என்ற மண்ணாங்கட்டி ஏன்?

எமது பிரச்சனை என்ன? எமது இலட்சியம் என்ன? இன்று இவ்வளவு பிரச்சனைகளுக்கு எம்மை முடுக்கிவிட்டு இழையோடியாய் நிற்கும் பிரச்சனை என்ன? எமக்கு இத் தேவை தமிழ் ஈழம். அதற்காக நாம் தயாரிக்க வேண்டும். மனிதநேய மற்ற இலாபம் கருதும் உற்பத்தி முறையால் முதலாளித்துவத்தினால் ஏற்படுத்தப்பட்ட பொருளாதார நெருக்கடிக்கும் தமிழீழப் பிரச்சனைக்கும் இடையே இருக்கும் சிக்கலை, தொடர்பை விளங்கிக் கொண்டு மூலதனத்தின் இயக்கமுறையை விளங்கிக் கொண்டு அதற்கெதிராகத் தயாரிக்க வேண்டும். அத்தயாரிப்புத்தான் தமிழீழத்திற்கான தயாரிப்பு.

ஏற்கனவே முதலாளித்துவ புரட்சி நடைபெற்ற ஜேர்மனி, அமெரிக்கா, பிரான்ஸ், இத்தாலி போன்ற இன்னோரன்ன நாடுகளிலெல்லாம் பொருளாதார நெருக்கடிகளை சமாளிக்கமுடியாமல் மருத்துவ காப்புறுதிகள், சமூக சேவைகள் தொடர்ச்சியாக வெட்டப்படுவதால் தவிர்க்க முடியாதெழும் வெகுஜனப் போராட்டங்களும், அவற்றை அடக்க இந்நாடுகள் 3ம் உலகப் போருக்கான தயாரிப்பை செய்வதைவிட வேறுமார்க்கமில்லை. இரண்டொரு தசாப்தத்திற்கு முன்னரே ஏற்பட்ட இந் நெருக்கடிகளை இத் தொழிற்துறை நாடுகள் 3ம் உலக நாடுகளுக்கு அவற்றின் உற்பத்திப் பொருட்களுடன் சேர்த்து ஏற்றுமதி செய்தன. இன்று 3ம் உலகநாடுகளின் நுகர்வுச்சக்தி பூச்சியமாகிவிட்டது. இப்படியான நேரத்தில் எந்தவொரு அதிகாரமுமில்லா மாவட்ட சுயாட்சி என்ற போர்வைக்குள் இருந்துகொண்டு எப்படித் தமிழீழத்தில் பல்கலைக்கழகங்கள், தொழிற்சாலைகள் அமைக்கலாம். தொழிற்சாலைகள் போடமுடியாவிட்டால் வேலையற்று இருக்கும் இளைஞர்கள் மாவட்ட சுயாட்சித் தன்மையை எதிர்த்துப் போராடத்தான் செய்வார்கள். இவற்றை அடக்க J.R இன் பொலிசு, இராணுவம் தான் மாவட்ட சுயாட்சித் தன்மைக்கு தேவைப்படும். இற்றைவரை வடபகுதி, கிழக்குப்பகுதி பிரிகேடியரின் அமைப்பின் கீழ் இராணுவம் வந்தது. இனிமேல் மாவட்ட சுயாட்சித் தன்மையின் கீழ் இராணுவம் வரும். மொத்தமாக வெகுண்டெழும் வெகுஜனங்கள் இராணுவத்தை எதிர்கொள்வது சூரியனை, சந்திரனை சந்திப்பது போன்றதாகிவிடும். இன்னும் நறுக்காக சொல்வதென்றால், மாவட்ட சுயாட்சியின் தன்மையின் கீழ் அரசாங்கத்தை பாதுகாக்கும் இராணுவம் இருந்தாலும். தொழில்மயமாக்கப்படாத தமிழீழத்தில் வெகுஜனக்கிளர்ச்சி தவிர்க்க முடியாது

இந்திய முதலாளித்துவத்தின் தலையீட்டினால் எந்த மட்டத்திற்கு தமிழ் ஈழப்பிரச்சனையை தீர்க்கமுடியுமென்பதை, நெருக்கடி சூழ்ந்த இன்றைய அரசியல் சகாப்தத்தின் தாக்க, அளவு கோலால் அளந்தால் ஒரு எல்லைக்கு மேல் முடியாது என்பது தீர்க்கமான விடயம். தமிழீழப்பிரச்சனையில் இந்தியா முந்நுக தலையிடுமானால் அது ஏகாதிபத்திய வல்லரசுக்கு முகம் கொடுக்க நேரிடும். ஏகாதிபத்தியத்தைதோற்கடிக்க சக்திபடைத்த இந்திய உழைக்கும் தொழிலாளவர்க்கத்தையும், உலகதொழிலாளவர்க்கத்தையும் இந்திரா காந்தி தனக்குப்பின்னால் அணிதிரட்ட தயாராவாரா? இதை அவரால் செய்யமுடியுமா? எந்நேரமும் உலக அரசியலை உற்று நோக்கி உறிஞ்சிக் கொள்ளும் இந்திரா காந்திக்கு தந்திரோபாயம் என்ன புதிதா? தனக்கு இனியில்லை என்ற அபத்து திடமானதும் தமிழீழப்பிரச்சனையை ஆயுதமாகப் பாவிக்கும். அதுவரையில் அது ஓர் இடைத்தீர்வைக் கொண்டு வந்து ஓரளவுக்கு நெருக்கடியை பின் தள்ளும் தந்திரோபாயத்தைப்பாவிக்கின்றது. இந்திரா காந்தியால் மொழியப்படும் இந்த விளையாட்டிற்கு அமிர்தலிங்கம் மேடையமைக்கத் தயார். இதை தமிழீழ விடுதலை இயக்கங்கள் ஏற்கப் போவதில்லை. மேற்கு ஜேர்மனிக்கு வந்த அமிர்தலிங்கம் சொன்னார் "முதன்முதலாக இந்திரா காந்தி எமது பிரச்சனையில் தலையிட்டிருக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

றார். அவரின் தலையீடு எமக்குச் சாதகமாக அமைய வேண்டுமென்றால் ஸ்ரீலங்காவில் J.R இருக்கவேண்டும். ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஆட்சியிலிருந்திருந்தால் இந்திரா காந்தி எப்படி நடந்திருப்பாரோ சொல்லமுடியாது. சந்தர்ப்பத்தை பயன்படுத்தி இந்திரா காந்தி கொண்டுவரும் திட்டத்தை நாம் ஏற்கவேண்டும். என்னை இந்திய மத்திய அமைச்சர்கள் கேட்டார்கள் எமது இந் நடவடிக்கையை இளைஞர் இயக்கங்கள் ஏற்றுக்கொண்டு உமக்கு கீழ் அணி திரளுமா? என கேட்டனர். நான் சொன்னேன் "உங்கள் தலையீட்டை நன்றியுடன் தமிழ்மக்கள் ஆதரிப்பார்கள் என்றும் நீங்கள் ஒன்றுக்கும் பயப்பட வேண்டாமென்றும் விடையளித்தேன்" மேலும் மக்களைப் பார்த்து "இவ் இயக்கங்களெல்லாம் எங்களுடன் சேர்ந்து இயங்கவேண்டும் இல்லாவிடில் என்ன செய்யவேண்டுமென்று எனக்குத் தெரியும். அதைப்பற்றி உங்களுக்கு விளக்கமாக சொல்ல வேண்டியதில்லை" என்றும் வெருட்டினர்.

கண்டிப்பாக இந்தியா "மாவட்ட சுயாட்சியை" கொடுப்பதற்கான தயாரிப்பைச் செய்யத்தான் போகின்றது. இல்லாவிடில் இயக்கங்களை உள்நாட்டுப் போருக்குத் தயாராக்க வேண்டும். எனவே மாநில சுயாட்சி என்ற இடைத்தீர்வு இந்தியாவிற்குத் தேவைப்படுகின்றது. இத்தீர்வை இயக்கங்கள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. இந்நேரத்தில் அமிர்தலிங்கம் இயக்கங்களை எல்லாம் காட்டிக்கொடுத்து இந்திய அரசாலேயே இவர்களுக்கு நெருக்கடியை தோற்றுவிக்கச் செய்வார். இயக்கங்களை நேரடியாக அழிக்காவிடினும் அவர்கள் இயங்க முடியாத அளவிற்கு அக்கமும் பக்கமுமாக நெருக்கடிகளை கொடுப்பார்கள். இலங்கைக்கு எமது வாலிபர்கள் போக முடியாதபடி கடற்படையை சூழ வைத்திருப்பார்கள். இது போன்ற பல்வேறு நெருக்கடிகள் அமிர்தலிங்கத்தாலும் இந்திய பூர்சுவாக்களாலும் நிச்சயம் உருவாகும்.

இன்றைக்கு தவிர்க்க முடியாதபடி அணுகிக் கொண்டிருக்கும் தமிழ் சோஷலிச புரட்சியை இந்திய, இலங்கை முதலாளித்துவங்கள் மாவட்ட சுயாட்சி என்ற முதலாளித்துவ அமைப்பால் பிரதியீடு செய்யப்பார்க்கின்றார்கள். எமக்குத் தேவை தமிழீழம். அது இந்திய உபகண்டத்தை புரட்சிக்கு உசுப்பிவிடும் தயாரிப்பு. அது உலகப்புரட்சியின் பகுதியில் ஒன்று. இதை செய்யவல்ல இந்தியத் தொழிலாள வர்க்கத்தையும் உலகத் தொழிலாளவர்க்கத்தையும் அணி திரட்ட இயக்கங்கள் தயாராக வேண்டும். "நமது தம்பிமார்கள் ஏதோ கொம்யூனிச புரட்சி செய்யப் போகினமாம்" என்று அமிர்தலிங்கம் நக்கலடித்துப் பேசும் அளவிற்கு உங்கள் புரட்சி ஆன்மா உயிரற்று விடக்கூடாது. வென்றெடுப்போம் தமிழீழத்தை.

"மாவட்ட சுயாட்சியை நிராகரி
ஆட்சியைக் கைப்பற்ற தயாரி"

---

தோழர்களே! பாகிஸ்தானின் ராணுவ அரசினூடாக ஜயவர்த்தன அரசாங்கத்திற்கு அமெரிக்க ஏகாதிபத்தியம் ராணுவ தளபாடங்களை இறைத்துக் கொண்டிருக்கும் இந்த நெருக்கடியான காலகட்டத்தில் வரலாற்று ஓட்டத்தை செவ்வனே விளங்கிக் கொண்ட ஒரு புரட்சிக் கட்சியின் அரசியல் நடவடிக்கைகள் நிதிப்பற்றாக் குறையினால் தடைபடுமாயின் மேலும் பல்லாயிரம் தமிழ் உயிர்களை U.N.P யிடம் தாரைவார்க்க நேரிடும். "தமிழ் ஈழ சர்வதேச சம்பந்தக் குழு"வின் ஜனவரி மாதத்திற்கான 4,000 D.M நிதியுதவி கோரிக்கையில் இன்றுவரை 922.D.M மட்டுமே கிடைக்கப்பெற்றுள்ளோம். பெப்ரவரி மாதத்திற்கான நிதியாக மேலும் 2,000 D.M உடனடியாக தேவைப்படுவதால் உங்கள் உயர்ந்த மட்ட சக்தியை பாவித்து இந்நிதிப் பற்றாக் குறையை ஈடுசெய்யுங்கள். ஓய்ந்திருக்கவேண்டாம்! பெப்ரவரி மாத அரசியல் நடவடிக்கைக்கான நிதிமட்டும் 2000 D.M. சிறிது சிந்திக்க!

சிரம் தாழ்ந்தவுடன்,
ஆசிரியர்.

V.MAHADEVA,
A/C 9037854,
DEUTSCHE BANK,
7000 STUTTGART-1, West Germany




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# செய்திகள்

## தமிழர் பிரச்சனைக்கு சர்வதேச ஆணைக்குழு அமைக்க சென்னை மாநாடு சிபார்சு.

இலங்கைத் தமிழர் பிரச்சனைக்கு நியாயமான தீர்வு காணும் பொருட்டு, கொள்கைகளை வகிக்க பலநாடுகளின் பிரதிநிதிகளைக் கொண்ட சர்வதேச ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும். இலங்கைத் தமிழர் ஒற்றுமை மாநாடு இவ்வாறு சிபார்சு செய்துள்ளது.

மலேசியப் பாராளுமன்ற எதிர்கட்சித் தலைவர் திரு. லிம் கிட் சியாங், திரு தொண்டமான், திரு. அமிர்தலிங்கம், திரு சிவசிதம்பரம் மற்றும் அனைத்துக்கட்சி உறுப்பினரும் கலந்து கொண்ட இம்மாநாட்டில் இலங்கை ஜனாதிபதியால் கூட்டப்படும் சர்வகட்சி மாநாடு தோல்வியடையுமேயானால் தமிழர் பிரச்சனைக்கு தனிவழியே ஒரேயொரு வழியென்று இம்மாநாடு தீர்மானித்துள்ளது. இலங்கைத் தமிழருக்கு நன்மை கிடைக்க அவர்கள் மத்தியிலுள்ள பல தரப்பட்ட விடுதலை இயக்கங்கள் ஒன்றுபட வேண்டும் எனவும், ஐக்கிய முன்னணி அமைக்க வேண்டும் எனவும் ஒரு தீர்மானத்தில் கோரப்பட்டுள்ளது.

தமிழர்கள் இந்திய வம்சாவளியினராகவோ, வேறு வகையினராகவோ இருந்தாலும் அவர்கள் அனைவரும் சமமாக கணிக்கப்பட்டு சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் எனவும் மாநாடு தீர்மானித்துள்ளது. டிசம்பர் 3, 4ம் திகதிகளில் நடைபெற்ற இம்மாநாட்டில் இரண்டாம் நாள் மாலை திரு. அமிர்தலிங்கம் உரையாற்றுகையில் இலங்கை ஜனாதிபதியால் கூட்டப்பெறும் சர்வகட்சி மாநாட்டிற்கு த.வி.கூட்டணிக்கு அழைப்பு கிடைத்தால் கலந்து கொள்ளப் போவதாக தெரிவித்தார். இந்திராகாந்தியின் தலையீட்டிற்கு நன்றியும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## "இலங்கையின் புலனாய்வு பிரிவு அதிகாரிகள் எங்கு பயிற்றுவிக்கப்படுகின்றார்கள்", சரத்முத்தெட்டுவேகம.

கலாநிதி எம்.பி. சரத்முத்தெட்டுவேகம பாராளுமன்ற கேள்வி நேரத்தில் "ஜுலை வன்செயல் காலத்தில் பாதுகாப்பு கவுன்சில் ஒன்று நாட்டில் இருந்ததா? பொலிஸில் ஐ.எஸ்.டி பிரிவு ஒன்று செயல்பட்டதா? ஜுலை வன்செயல் சம்பந்தமாக மதிப்பீடு ஒன்றை நடத்தினீர்களா? இச்சம்பவத்தின் பின்னணியை, உண்மைகளை கண்டறிந்தீர்களா? ஒரு கட்சி மீதான தடையை நீக்கிவிட்டீர்கள். இரு கட்சிகள் இன்னமும் தடைசெய்யப்பட்டுள்ளன. புலனாய்வுத்துறை தகவலை அடுத்தே இப்படிச் செய்தீர்கள். ஆனால் இவற்றை நிரூபிக்கமுடியவில்லை. அப்படியானால் இந்தப் புலனாய்வுத்துறை அதிகாரிகள் உங்களை ஏமாற்றியுள்ளார்களா? இந்த அதிகாரிகள் எங்கு பயிற்றுவிக்கப்படுகின்றார்கள்? இவர்களது கொள்கை என்ன? நீங்கள் இதனை ஆராய வேண்டும். புலனாய்வுத் துறையை நீங்கள் நவீனமாக்க வேண்டும்." என்று குறிப்பிட்டார். மாஸ்கோ சார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் பாராளுமன்ற அங்கத்தவரான திரு. சரத் முத்தெட்டுவேகம முதலாளித்துவ அரசுப் பொறியமைப்பை நொருக்கி கைப்பற்றுவது பற்றி ஆராய்ச்சி செய்யாமல், அக்கொள்கையின் பக்கம் சாயாமல் தொழிலாளவர்க்கத்தினை ஒடுக்கும் ஒரு பகுதியாகிய புலனாய்வுத் துறை நவீனமயமாக்க வேண்டும் என்று கூறுகின்றார். இதுதான் மாஸ்கோ சார்பு கம்யூனிஸ்கட்சியின் இன்றைய [illegible] தத்துவார்த்த பாதிப்பு. முதலாளித்துவ உற்பத்தி உறவால் ஏற்பட்ட தமிழீழப் போராட்டமும், மற்றைய [illegible]களையும் இந்த முதலாளித்துவ அமைப்புமுறையாலேயே தீர்க்கலாமென்று இவர்கள் எதிர்பார்க்கின்றார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"வட்டமேசை மகாநாட்டிற்கு நாங்கள் போவோம்; சிங்களவர் உரிமையை விட்டுக்கொடாது பேசுவோம்":- அநுரா

புதிய எதிர்க்கட்சித் தலைவராக தெரிவு செய்யப்பட்ட நுவரெலியா- மஸ்கெலியா தொகுதி 2வது உறுப்பினர் திரு. அநுரா பண்டாரநாயக்கா தமக்களிக்கப்பட்ட வரவேற்புரை ஒன்றில் தானும் ஆளும் வர்க்கத்தின் இனவாதிகளுக்கு சளைத்தவரில்லை என்பதை தனது பேச்சின் மூலம் உறுதிப்படுத்தினர். அவர் தனது பேச்சில் "தமிழ்மக்களின் பிரச்சனைகளை தீர்க்க ஜனாதிபதி வட்டமேசை மகாநாட்டிற்கு அழைத்துள்ளார். சிங்களமக்களின் உரிமைகளை விட்டுக் கொடாத முறையில் நாம் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வோம். இந் நாட்டை இரண்டாக பிரிப்பதையோ, துண்டு போடுவதையோ ஒரு சிங்கள மகனும் விரும்பவில்லை. நாட்டைப் பிரித்து ஒரு புல்லு முளைக்கும் இடத்தைக் கூட பிரித்தெடுக்க நாம் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை. சிங்கள மக்களின் உரிமைகளையும், கடமைகளையும் காப்பாற்றுவதே எமது ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் முக்கிய கடமையாகும். சிங்கள மக்களுக்கு வேறு எந்த நாடும் இல்லை. தமிழர்களுக்கு தமிழ் நாடு உண்டு. அவர்கள் விரும்பினால் அங்கு போய் விடலாம். தமிழ்நாடு இவர்களுக்கு தஞ்சமளிக்கும். நாம் சிங்களவர்கள் எங்கே போவது? பாகிஸ்தான், பங்களாதேஷ் எம்மை ஏற்காது." என்று குறிப்பிட்டார். இனவாதங்களைக் கக்காமல் ஆட்சிக்கு வரமுடியாது என்பதை நன்கே அறிந்த அரசியல்வாதிகள் ஒடுக்கப்பட்டும், சுரண்டப்பட்டும் விரக்தியின் எல்லைக்கு வந்திருக்கும் தென் இலங்கை மக்களை, வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதன் மூலமோ, வறுமையை விரட்டுவதன் மூலமோ கவர முடியாது இனவாதத்தை ஒருவர்மாறி ஒருவர் கக்குகின்றனர்.



## மட்டக்களப்பு பல்கலைக்கழகத்தில் விடைத்தாள்கள் கொள்ளை

மட்டக்களப்பு பல்கலைக்கழகத்தில் கடந்த 8.12.85 வியாழக்கிழமை அதிகாலை, பல்கலைக்கழக இறுதியாண்டிற்கான பரீட்சை விடைத்தாள்களும், ஒரு போட்டோ பிரதியெடுக்கும் இயந்திரமும், இரண்டு ஆங்கில தட்டச்சு இயந்திரங்களும், மற்றும் கடதாசிக் கட்டுக்களும் இனந்தெரியாத நபர்களினால் அபகரிக்கப்பட்டுள்ளது. அபகரிக்கப்பட்ட விடைத்தாள்களை எடுத்துச் செல்லாமல் வெளியே கிழித்தெறியப்பட்டுக் காணப்பட்டன. இவற்றின் பெறுமதி 2½ இலட்சரூபாவாகுமெனமதிப்பிடப்பட்டுள்ளன. மேற்படி கொள்ளை தொடர்பாக இரு சிரேஷ்ட மாணவர்கள் பொலிசாரினால் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகின்றனர்.

## "வேலை நிறுத்தம்" காரணமாக வேலையை இழந்தவர் தற்கொலை

1980ம் ஆண்டு நடைபெற்ற வேலைநிறுத்தம் காரணமாக வேலையை இழந்தவர் வாழ்க்கையில் ஏற்பட்ட விரக்தியின் காரணமாக தற்கொலை செய்துகொண்டார். ஆனைக்கோட்டை ஆறுகால் மடத்தைச் சேர்ந்த 35 வயதான பி. தயராசா 1980ம் ஆண்டு இடம்பெற்ற பொதுவேலை நிறுத்தத்தால் வேலை இழந்து கடன்பட்டு, கடன்பட்டு குடும்பத்தை நடாத்திவந்தவர். இவர் மேலும் தனது குடும்பச்சுமையையும் கடன்சுமையையும் தாங்கமுடியாமல் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார். ஜெயவர்த்தனவின் இனவெறியினால் தங்கள் உடமைகளை இழந்து வடபகுதிக்குவந்திருக்கும் அகதிகள் பலரும் வாழ்க்கையின் வெறுப்புற்றே வாழ்கின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வடக்கு, கிழக்கில் பூரண ஹர்த்தால்:-

இடம் பெயர்ந்து வந்த தமிழ் பல்கலைக் கழக மாணவருக்கு தமிழ்ப் பகுதி பல்கலைக்கழகங்களில் கல்வியைத் தொடர வாய்ப்பு அளிக்கப்பட வேண்டுமென்று விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அரசாங்கம் இன்னமும் செவிமடுக்காததை ஆட்சேபித்து வடபகுதியில் 14.12.83 புதன்கிழமை நடைபெற்ற ஹர்த்தால் பூரண வெற்றி என அனைத்து தமிழ் மாணவர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன் போது பஸ்கள் ஓடவில்லை; மினிவான் போக்குவரத்துக்கள் நடைபெறவில்லை; கடைகள் பூட்டப்பட்டன; அலுவலகங்கள் கருமமாற்றவில்லை; பாடசாலைகளை மாணவர்கள் முழுமையாக பகிஷ்கரித்தார்கள்; என தமிழ் மாணவர் சங்கம் தெரிவித்துள்ளது. யாழ் நவீன சந்தைப் பகுதியில் இரண்டு குண்டு வெடிப்பு சம்பவங்கள் இடம்பெற்றன. ஆயுதம் தாங்கிய இராணுவத்தினர் நவீன சந்தை, பஸ் நிலையம் போன்றவற்றை காவல் செய்து கொண்டிருந்தனர்.

திருகோணமலை இடைத்தேர்தலுக்கான நியமனத் திகதி ஒத்திவைப்பு:-

திருகோணமலைத் தொகுதியின் பாராளுமன்ற இடைத்தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யும் திகதி ஒரு மாத காலத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவு ஜனாதிபதியால் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது. 8.12.83 வியாழன் நடைபெறவிருந்த நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்வதற்கான திகதி, ஜனாதிபதியால் கூட்டப்படவிருக்கும் சர்வகட்சி வட்ட மேசை மகாநாட்டின் பின்னரே நடைபெற தற்காலிகமாக ஒத்திவைக்கப் பட்டுள்ளது. இந்த அறிவிப்பு அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஜனாதிபதியால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.



விலைவாசி ஏற்றத்தை எதிர்த்து மறியல் போராட்டம் நடாத்தியோர் பெருவாரியாக கைது.

தமிழ்நாட்டில் தொடர்ச்சியாக ஏறும் விலைவாசி உயர்வை எதிர்த்து பாராளுமன்ற பதின்நான்கு எதிர்கட்சி கூட்டு முன்னணியினரால் 15.12.83 வியாழக்கிழமை அரசு அலுவலகங்களுக்குமுன்னர் நடாத்தப்பட்ட மறியல் போராட்டத்தில் தமிழ்நாடு முழுவதிலும் 18,341 ஆர்ப்பாட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்களில் பெரும்பாலானோர் அடுத்தநாளே விடுதலை செய்யப்பட்டனர்.

சென்னையில் மட்டும் இரு நூற்றைம்பது பேர் வரையில் கைது செய்யப்பட்டுள்ளனர். திராவிட முன்னேற்றக் கழக தலைவர் முத்துவேல் கருணாநிதியின் தலைமையின் கீழ் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்ட, மறியல் போராட்டத்தை பற்றி நிருபர்களின் மத்தியில் பேசும் போது தொண்டர்களை காவல் நிலையங்கள் நிரம்பி வழிந்ததால் மண்டபங்களிலும், விளையாட்டரங்குகளிலும் கைது செய்து வைத்திருந்தனர் என குறிப்பிட்டார்.

கடாபி - அமின் கமாயல் சந்திப்பு:-

திரிப்போலி:-

லெபனிய பலன்கிஸ்ற் (FALANGIST) ஜனாதிபதி அமின் கமாயல் லிபியத் தலைவர் கேர்ணல் மாமூர் கடாபியை லிபிய தலைநகரான திரிப்போலியில் சந்தித்தார். லிபிய செய்தி ஸ்தாபனம் இருவரின் சந்திப்பைப்பற்றி விபரிக்கையில் லெபனிய நெருக்கடியை தீர்க்க இருவரும் ஒத்துழைப்பதற்கு உறுதிபூண்டுள்ளார்கள் என தெரிவித்தது. P.L.O தலைவர் அரபாத், கொஸ்னி முபாரக்கை சந்தித்ததை கண்டித்த கடாபி, அமெரிக்க ஏகாதிபத்திய கைப்பொம்மையான அமின் கமாயலை சந்தித்ததை என்னவென்பது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்திய உள்விவகாரங்களில் அமெரிக்க C.I.A தலையீடு.

இராணுவத் தகவல்களை வெளியிட்டால் தனக்கு வெகுமதி வழங்க முன்வரப்பட்டதாக விமானப்படை அதிகாரி அறிவித்ததை அடுத்து, மூன்று இராணுவ சிரேஷ்ட அதிகாரிகள் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர். இராணுவ லெப்டினன்ட் கேணல் ஜஸ்பீர் சிங், இராணுவ மேஜர் ஜெனரல் எப். டி. லர்கின்ஸ், எயார் வைஸ் மார்ஷல் கே. எச். லர்கின்ஸ் (இருவரும் சகோதரர்கள்) ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளனர். இது தவிர ஜஸ்பால் சிங் என்ற நான்காவது நபரும் கைது செய்யப்பட்டுள்ளார். இதனை இந்திய பாதுகாப்பு அமைச்சர் வெங்கட்ராமன் பாராளுமன்றத்தில் உத்தியோக பூர்வமாக அறிவித்தார்.

இந்தியாவில், C.I.A யின் இத்தலையீட்டை ஆட்சேபித்து, அமெரிக்க கொள்கையை எதிர்க்கும் குழுக்கள் இந்தியாவில் உள்ள அமெரிக்க தகவல் சேவை கட்டிடத்தின் ஒரு பகுதியை முற்றுகையிட்டு ஆக்கிரமித்தனர். அமெரிக்கத் தூதர் இந்தியாவை விட்டு வெளியேற்றப்படவேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விட்டனர். பெரும்பாலான மாணவர்களும் பங்கு பற்றிய இந்த ஆக்கிரமிப்பின் போது கட்டிடத்திலுள்ள அமெரிக்க வாசிகசாலையின் ஜன்னல் வழியே துண்டுப்பிரசுரங்களையும் வெளியே எறிந்தனர்.

C.I.A இன் இவ் உளவு, நவ காலனித்துவ சிரண்டலையும் மீறி நேரடி காலனித்துவ கிறனடா (GRENADA) பாணியில் இந்தியாவிலும் நுழைய முயற்சித்தமையையே அம்பலப்படுத்துவதாக அமைந்திருக்கின்றது. இந்த முறை திருகோணமலைக்கும் பிரயோகிக்கப்படலாம்.



யாழ்/அரசினர் வைத்தியசாலையில் நோயாளர் பெரும் அவதி.

யாழ் மாவட்டத்தின் சிறந்த வைத்தியசாலை எனப்போற்றப்படும் யாழ் அரசினர் வைத்தியசாலையில் போதிய மருந்துகளும், மருத்துவ வசதிகளும், படுக்கை வசதிகளும் இல்லாததால் நோயாளர்கள் பெரிதும் கஸ்டப்படுகின்றனர். மேற்படி ஆஸ்பத்திரியின் 14ம் வார்ட்டில் மட்டும் நூற்றுக்கு மேற்பட்ட நோயாளர்கள் படுக்கைகள் இல்லாமையால் வார்ட்டின் விறாந்தைகளில் தங்கி சிகிச்சை பெறும் இவர்கள் கடுங்குளிர், தூவானத்தால் அவதிப்படுகின்றனர். படுக்கைகள் உள்ளோரும் காற்று வீசினால் தூவானம் அடித்து படுக்கைகள் நனைவதாக புகார் கூறியும், இன்னும் அதுபற்றி நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. ஆஸ்பத்திரிக்கு வரும் வெளிநோயாளர்களும் போதிய மருந்து இல்லாமையால் தனியார் வைத்தியசாலையே கதி என தவம் கிடக்கின்றனர்.

"இலங்கைத் தமிழர் பிரச்சனைக்கு உலக நாடுகளின் ஆதரவைத் திரட்டித் தாருங்கள்" :- தமிழர் எழுச்சி மாநாடு.

வங்காள தேசவிடுதலைப் போராட்டம், பாலஸ்தீன விடுதலைப் போராட்டம் ஆகியவை போன்று இலங்கைத் தமிழர் பிரச்சனையிலும் உலக நாடுகளின் ஆதரவைத் திரட்டித் தரவும், அவதியுறும் அந்த மக்களுக்கு உதவவும் மத்திய அரசு முன்வரவேண்டும் என திருச்சியில் நடைபெற்ற உலகத் தமிழர் எழுச்சி மகாநாட்டில் கலந்து கொண்டோர் அனைவரும் மத்திய அரசை கேட்டுள்ளனர். தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் ஏற்பாட்டில் நடைபெற்ற இம்மகாநாட்டில், தற்போதைய மத்திய அரசின் தலையீட்டையும் வரவேற்றுள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஈழவிடுதலை இயக்கங்களின் துண்டுப்பிரசுரம்

அண்மையில் இந்தியாவில் நடந்த பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மகாநாட்டின்போது தங்களது கொள்கை சோசலிசத் தமிழீழம் என்று பிரகடனப்படுத்திய PLOT, E.P.R.L.F போன்ற இயக்கங்கள் இத்தலைவர்களை தமிழீழத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும்படி வேண்டி எழுதிய துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டனர். இத்தலைவர்கள் ஜெயவர்த்தனவோடு ஒப்பிடுமிடத்து சிறிது நடுநிலையானவர்கள் என்று இவர்கள் எண்ணினார்களோ தெரியவில்லை. பொதுநலவாயத் தலைவர்கள் என்போர் அந்தந்த நாடுகளிலுள்ள பிற்போக்கு கட்சிகளின் தலைவர்களே. எதிர்ப்புரட்சி கட்சிகளின் தலைவர்களுமேயாவர்.

பொதுநலவாயம் என்பதென்ன. பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் காலனிகள் விடுதலைப் போராட்டங்களை நடாத்திய பொழுது அவைகளை தொடர்ந்து சுரண்டுவதற்காக அவைகளை நவகாலனிகளாக வைத்திருக்க எடுத்த புதிய தந்திரோபாயம் தான் பொதுநலவாயம்.

இது முதலில் பிரித்தானியாவின் ஆங்கிலேயர் குடியேறியுள்ள காலனிகளான, கனடா, அவுஸ்ரேலியா, நியூசிலாந்து தென்னாபிரிக்கா, ஐயர்லாந்து ஆகிய நாடுகள், காலனியின் ஆளுமை நாடான இங்கிலாந்தோடு ஏற்படுத்திய ஒப்பந்தமாகும் இது சட்டப்படி 1931ல் WEST-MINISTER ல் ஏற்பட்ட போதும் அதற்கு முந்திய காலங்களிலே இக்காலனிகளின் சுதந்திரப் போராட்ட காலங்களிலும் டொமினியன் அந்தஸ்து (காலனிகளின் தாயான இங்கிலாந்தோடு இவைகளுக்கு சமமான அரசியல் அந்தஸ்து) என்ற பெயரால் வழங்கப்பட்டு பிரித்தானிய ஏகாதிபத்தியம் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்க செய்த சூழ்ச்சியே. இந்த சுதந்திர நாடுகள் பொருளாதார ரீதியில் பிரித்தானியாவில் தங்கி நின்றதினால் பிரித்தானியா இவற்றை அரசியல் ரீதியிலும் கட்டுப்படுத்தியது. முதலாவது யுத்தத்தின் போது இந்த டொமினியன் அந்தஸ்துடைய நாடுகள் இங்கிலாந்தோடு சேர்ந்து கொண்டன.



1931ல் கனடா தவிர்ந்த மற்றைய நாடுகள் ஸ்ரேலிங் பவுண்டினூடு வர்த்தகம் செய்யும் கூட்டுநாடுகளாகவும் ஒப்பந்தம் செய்யப்பட்டன. இந்நாட்களில் கனடா பொருளாதார ரீதியில் இங்கிலாந்தில் அதிகம் தங்க வேண்டிய தேவை ஏற்படவில்லை. இவைகளுக்கு சுய அந்தஸ்து வழங்கிய போதும் இவைகளின் வெளிநாட்டு உறவுகளை இங்கிலாந்தே கட்டுப்படுத்தியது. இந்த டொமினியன் நாடுகள் மற்றைய நாடுகளோடு நேரடி இராஜரீக உறவற்ற நாடுகளாகவே இருக்கவிடப்பட்டது. 1929-1933 ல் நிலவிய பெரிய உலகப் பொருளாதார நெருக்கடியின் போது பிரித்தானிய சாம்ராச்சிய நாடுகளினுள் பெரிய நெருக்கடிகள் ஏற்படவே இந்நாடுகளினுள் முதல் முதலாக அமெரிக்க, ஜப்பானிய, ஜேர்மனிய மூலதனங்கள் நுழைந்தன. இருந்த போதும் இங்கிலாந்து மூலதனம் ஆளுமை படைத்ததாகத் தப்பிப்பிழைத்தது. இந்த நாடுகளை ஒரே முகமாகப் பாதுகாப்பது என்ற ஒப்பந்தத்திற்கிணங்க "IMPERIAL-DEFENCE" என்று சொல்லி பிரித்தானிய சாம்ராச்சிய நாடுகள் முழுவதும் இராணுவத்தளங்கள் போடப்பட்டன

உலகயுத்தத்தையடுத்து ஏராளமான காலனித்துவ நாடுகள் சுதந்திரமடையும் பொழுது அவைகளுக்கு டொமினியன் அந்தஸ்து வழங்கி பொதுநலவாயத்திலும் சேர்த்துக்கொள்ளப்பட்டன. இவை சட்டப்படி சமமான அந்தஸ்து உடையவை என்று பிரகடனப்படுத்திய போதும் இவை கூட்டாக இங்கிலாந்தின் முடியுரிமையின் கீழ் இருக்கவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது 1932இல் (OTTAWA-ACCORDS) ஒட்டாவ தீர்மானத்தின்படி இந்த நாடுகளில் வர்த்தகம் செய்வோர் இங்கிலாந்திற்கு வரி செலுத்த வேண்டும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


1947ல் இந்தியாவிற்கு டொமினியன் அந்தஸ்து வழங்கப்பட்டு 1950ல் அது குடியரசானது. 1947ல் பாகிஸ்தானுக்கு டொமினியன் அந்தஸ்து வழங்கப்பட்டது. 1956ல் இதற்குக் குடியரசு உரிமை வழங்கப்பட்டது. 1948ல் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்பட்டது 1949ல் இந்தியா குடியரசெனப் பிரகடனப்படுத்தியதோடு பொதுநலவாயம் தனது முடியுரிமைக் குணாம்சத்தை இழந்தது. இதைத் தொடர்ந்து பல நாடுகள் பொதுநலவாயத்திலிருந்து விலகின. அமெரிக்க ஏகாதிபத்தியத்தினது பொருளாதார அரசியல் தாக்கங்கள் விஸ்தரிக்கப்படவே பொதுநலவாயம் மேலும் பலவீனமடைந்தது. இன்று அமெரிக்க ஏகாதிபத்தியம் பொதுநலவாய நாடான கிறனடாவை ஒழிவு மறைவின்றி ஆக்கிரமித்தபோது இங்கிலாந்தின் IMPERIAL-DEFENCE கைகாலாகாது பார்த்துக் கொண்டிருந்ததோடு இங்கிலாந்தின் பொதுநலவாயத் தலைமை ஸ்தாபனம் காற்றில் பறந்தது. பொதுநலவாய நாடுகளிலுள்ள மக்கள் தொடர்ந்து காலனித்துவத்திற்கும் நவகாலனித்துவத்திற்கும் எதிராகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

---

சர்வகட்சி மகாநாட்டிற்கு ஜே.வி.பி, நவசமசமாஜக் கட்சிகளுக்கு அழைப்பு இல்லை:-

தமிழர் பிரச்சனைக்கு தீர்வு காணலாம் என ஜெயவர்த்தன கூட்டும் சர்வகட்சி மகாநாட்டிற்கு மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி), நவசமசமாஜக் கட்சிகளுக்கு அழைப்புகள் அனுப்புவதில்லை என சிரேஷ்ட அமைச்சர் கூறினார். சமீபத்திய இனக்கலவரத்தை நடாத்தியவர்கள் என்ற குற்றத்தின் பேரில் தடைசெய்யப்பட்டுள்ளதாலேயே மேற்படி கட்சிகளுக்கு அழைப்பு அனுப்பவில்லை






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மூலதனம், அரசு, புரட்சி.

பல தசாப்தங்களாக மூலதனம் வளர்ச்சியடைந்து வரும் காலகட்டத்தில் முதலாளித்துவம் கூர்ப்பெய்தும் போது மூலதனத்தைப் பாதுகாப்பதற்காக தோற்றுவிக்கப்பட்ட வடிவ அமைப்புகளே இன்றைய பொலீசும், இராணுவமும். இது காலாகாலமாகத் தயாரிக்கப்பட்டது. சமூகத்திலிருந்து வரும் மூலதனத்திற்கெதிரான நெருக்கடிகளை நேருக்கு நேர் நின்று இப்பொலீசும், இராணுவமும் தாக்குப்பிடிக்கின்றன, அடக்கி விடுகின்றன. முன்னைய காலங்களில் இப்போதைய பொலிசுகளை ஒத்த காவலர்கள் தொழிற்சாலைகளில் காவலுக்கு அமர்த்தப்பட்டார்கள். மூலதனத்தை திருட விடாமலும், மூலதனத்திற்கெதிராக தொழிலாளர்கள் கிளர்ந்தெழுந்த போது அவர்களை அழித்தும், அச்சுறுத்தியும் வந்தனர். இயலாத போது வேறு தொழிற்சாலைகளிலுள்ள காவலர்கள் வரவழைக்கப்பட்டு கூட்டாக நின்று வலுக்கட்டாயமாக தொழிலாளர்களை அச்சுறுத்தி வேலைக்கு அமர்த்தினர். இக்காவலர்களின் வளர்ச்சியே அன்றிலிருந்து இன்று வரை மூலதனத்தைப் பாதுகாக்கும் அரச இயந்திரங்களின் கருவியாக இருக்கின்றது.

அரசயந்திரம் புராதன காலந்தொட்டு இன்று வரை அழிந்து விடவில்லை. ஆண்டான் அடிமை முறையிலிருந்து, பண்ணையடிமை முறை, நிலப்பிரபுத்துவ முறை, முடியாட்சி, இன்று முதலாளித்துவ ஆட்சி முறை என்று வரலாற்று ஓட்டமாக ஆட்சிமுறை மாறி வந்தது. இந்த ஆட்சி முறையின் சகாப்தங்களில் அரசு என்னும் இயந்திரம் ஒவ்வொரு சகாப்த அரசியல் அமைப்பிற்கு ஏற்றாற் போல் வித்தியாசப்படினும், அது கூர்ப்படைந்து வரினும் ஒரு பகுதி மக்களை எவ்வரலாற்று அடிப்படையிலும் ஒடுக்கியும், சுரண்டியுமே வந்தது.



இவ்வொடுக்கு முறைக்கெதிராக மக்கள் கிளர்ந்த போதெல்லாம் அரச யந்திரத்தை பாதுகாப்பதற்கென்று நிர்மாணிக்கப்பட்ட அன்றைய பொலிஸ் அவைகளை முறியடித்தன. இன்றைய வளர்ச்சியடைந்த பொலிசும், இராணுவங்களும் இன்றைய கிளர்ச்சிகளை முறியடிக்கின்றன. எவ்வரசாட்சி வரலாற்று அடிப்படையிலும் ஆளும் வர்க்கம் [மூலதனம் உடையோர்] ஆளப்படும் வர்க்கம் என்ற பேதத்தை உருவாக்கி வந்தது. மூலதனம் வளர்ச்சியடைந்து, வளர்ச்சியடைந்து வர உற்பத்தி ஒன்றுகுவிப்பு ஒரு சிறுதொகையுள்ள பகுதியினரை ஆளும் வர்க்கமாக மாற்றிக் கொண்டு சென்றது. அடுத்த பக்கத்தில் ஆளப்படுவோர்களாக, சுரண்டப்படுவோர்களாக, ஒடுக்கப்படுவோர்களாக பெரும் பகுதி மக்களை தள்ளிற்று. இன்றைய முதலாளித்துவ சகாப்தத்தில் ஆளும் முதலாளித்துவ வர்க்கம் பெரும் தொகையான தொழிலாள வர்க்கத்தை ஈவிரக்கமின்றி தனது பேய் வஞ்சக எண்ணங்களுக்கு வலுக்கட்டாயமாக அடிபணியச் செய்கிறது. மக்களை கீழ்ப்படியச் செய்யும் இன்றைய அரசாங்கங்களைப் பாதுகாப்பதற்கென்றே விசுவரூபம் எடுத்துவிட்டன. பொலிஸ் இராணுவம் சிறைச்சாலை என்ற இந்த அரச இயந்திரங்கள் அரசுக்கெதிராக கிளர்ந்தெழும் மக்களை, தொழிலாள வர்க்கத்தை அடக்கும், அச்சுறுத்தும் ஒரு விசேட நிர்வாகக் கருவிகளாகிவிட்டன. அதாவது மூலதனத்தை பாதுகாக்கும் கருவிகளாகி விட்டன. ஒன்றுக்கொன்று முரணான இரண்டு பகைமையான வர்க்கங்களை தோற்றுவித்து விட்ட இன்றைய சகாப்தம் அம்முரணான, பகைமையான முதலாளித்துவ வர்க்கத்தையும், தொழிலாள வர்க்கத்தையும் இணக்கம் காணமுடியாது என்பதன் விளைவாய் தொழிலாள வர்க்கத்தை ஒடுக்குவதற்கென்றே ஒரு விசேட உறுப்-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாக அரசை நிலைநிறுத்திக் கொண்டு விட்டது. இன்றைய அரசாங்கங்கள் தன்னைப் பாதுகாக்கும் கருவிகளாக, பொலீசும், இராணுவங்களுமாக நவீன முறையில் விஞ்ஞான ரீதியாக தொழில்நுட்ப ரீதியாக பல்வித முன்னேற்றத்துடன் மூலதனத்தால் உருவாக்கப்பட்டது.

"வர்க்கப் பகைமைகளை கட்டுப்படுத்துவதன் அவசியம் காரணமாய் அரசு உதித்தது என்பதனாலும் அதே போதில் இந்த வர்க்கங்களுக்கிடையிலான மோதல்களிலிருந்தே அது உதித்தது என்பதனாலும் பொதுவாக அது மிகப்பலம் படைத்த பொருளாதாரத் துறையில் ஆதிக்கம் செலுத்தும் வர்க்கத்தின் அரசாகி விடுகிறது. அரசின் உதவியால் இவ்வர்க்கம் அரசியல் துறையிலும் ஆதிக்கம் செலுத்தும் வர்க்கமாகி, ஒடுக்கப்பட்ட வர்க்கத்தை அடக்கி வைப்பதற்கும் சுரண்டுவதற்கும் இவ்வாறு புதிய சாதனங்களைப் பெற்றுக் கொள்கிறது."

புராதன அரசுகளும், பிரபுத்துவ அரசுகளும் அடிமைகளையும், பண்ணையடிமைகளையும் சுரண்டுவதற்கான அமைப்புகளாய் இருந்தன. இதே போதில் நவீனகால மக்கள் பிரதிநிதித்துவ அரசு கூலி உழைப்பை மூலதனம் சுரண்டுவதற்கான கருவியாய் இருக்கின்றது. இவ்வாறு 'எங்கெல்ஸ்' கூறுகின்றார்.

அரசு என்பது எக்கோணத்தில் நோக்கினும் எப்பக்கத்தில் நோக்கினும், மூலதனங்களைப் பாதுகாப்பதற்கென்றே சுயாதீனமான தனித்துவத்தன்மையைப் பெற்றுள்ளது. ஜனநாயகக் குடியரசுகளென்றும், சோசலிசக் குடியரசுகளென்றும், தம்மைப் பெயரளவில் கூறிக் கொள்ளும் அரசுகளெல்லாம் அந்த ஈன இரக்கமின்றி மூலதனத்தின் ஆட்சியையே வெளிப்படுத்துகின்றது

அமெரிக்கா, ஜேர்மனி, சுவிற்சலாந்து, இங்கிலாந்து,



பிரான்சு, போன்ற நாடுகள் மூலதனத்தின் ஆட்சிக்கு நல்ல உதாரணங்களாகும். இன்றைய எல்சல்வடோரின் போராட்டம் 15 பிரபுக்களின் குடும்பத்தை பாதுகாக்கும் அவர்களின் மூலதனத்தைப் பாதுகாக்கும் அரசுக்கெதிராக நடக்கும் கிளர்ச்சியாகும். இம் மூலதனத்தைப் பாதுகாக்கும் எல்சல்வடோர் இராணுவ அரசுக்கு அமெரிக்கா போன்ற ஏகாதிபத்திய நாடுகளும் தமது முழு உதவியையும் செய்து வருகின்றன. இலங்கை அரசாங்கமும் தனது ஆட்சியை இலகுவாக்குவதற்காக, தொழிலாள வர்க்கம் தனக்கெதிராகக் கிளர்ந்தெழாமல் இனவாதம் என்னும் ஆயுதத்தை கையேந்துகிறது. இதுவும் ஒரு சில மூலதனக்காரரின் சுரண்டல் வேட்டைகளை நியாயப்படுத்தும் வகையில் அம்மூலதனத்தைப் பாதுகாக்கும் வகையில் ஆட்சியின் இழையோடியாய் அமைந்துள்ளது. தமிழீழப் போராட்டத்தில் குதித்துள்ள நாம் இன்று பொலிசுடன், இராணுவத்துடன் முட்டி மோதும் நாம் தமிழீழக் கோரிக்கை தோன்றக் காரணமாயமைந்த ஆணி வேரின் பக்கம் திசை திரும்பாவிடில் தமிழ் ஈழத்தை அமைத்து விட முடியாது. முதலாளித்துவத்தின் இலாபம் கருதும் உற்பத்தி முறையானது மனித தேவை கருதாது இலாப வேட்கையுற்று சந்தை பிடிக்கும் போட்டா போட்டி பன்மடங்காகி ஏகாதிபத்தியமாக வளர்ச்சியுற்றுள்ளது. முழு மனித சமுதாயத்துக்கான பண்டங்கள் அனைத்தையும் உற்பத்தி செய்யும் ஓர் சில மூலதனக்காரர்களின் கையில் உற்பத்தி ஒன்றுகுவிப்பு உறைந்து விட்டது சுதந்திர வர்த்தக வலையத்தையும் மீறி இன்று சந்தை பிடிப்பதற்காக போட்டி போட்டுக் கொண்டிருக்கும் ஏகாதிபத்திய நாடுகளும் அதன் கூறுகளான நிதிமூலதனங்களும், I.M.F, I.B.R.D, CLUB OF ROME, பென்டகன் போன்றவையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்று 3ம் மண்டல நாடுகளையும் மற்றும் வறிய நாடுகளை-
யும் சுரண்டியும், ஒடுக்கியும் வருகின்றன. அபிவிருத்தியின்
பெயரால் I.B.R.D, எமது நாட்டின் பட்ஜட் போடு-
கின்றது. தொழிற்சாலைகள் போட விடாது தடுக்கின்-
றது. 1947ல் இந்தியா சுதந்திரமடைந்த பின் 1948ல்
இலங்கைக்கு சுதந்திரம் வழங்கினார்கள். இணைந்திருந்த
இந்தியா, பாகிஸ்தான், சிலோன், போன்ற நாடுகளை
வேண்டுமென்றே ஏகாதிபத்தியங்கள் பிரித்தன. 1948
இந்தப்பின் இலங்கைக்கு பெருவாரியான கடனை I.M.F,
இறைத்து அந்த வாழ்க்கைத்தரத்தை உயர்த்தியது. இந்-
தியாவிற்கு கடன் வழங்காமல் அந்த வாழ்க்கைத்தரத்-
தை இறக்கியது. இலங்கையின் நாணய பெறுமதியை
உயர்த்தி இந்திய மக்களை இலங்கையைத் தேடி வரும்
அளவிற்கு இரண்டு நாடுகளுக்குமிடையில் வித்தியாச-
மான வாழ்க்கைத் தரத்தை உண்டு பண்ணி பிரித்தது,
இந்நிலையில்தான் பாகிஸ்தானில் மதவாதத்தை தூண்டி-
ஜின்னாவிற்கு காசைக் கொடுத்து பிரித்துவிட்டது. நிதி-
மூலதனங்கள், இவ்வாறு உலகிலுள்ள பல நாடுகளை தனது
சுரண்டலையும், ஒடுக்குமுறையையும் இலகுவாக்க, இவ்-
வாறு பிரித்தாளும் தந்திரத்தை கையாளுகின்றது.

கடன் வாங்கியே வயிற்றை வளர்த்து வந்த
இலங்கைக்கு இன்று கடன் கிடைக்காமல் பொருளா-
தார நெருக்கடி கட்டுக்கடங்காமல் சூழ்ந்து விட்டது.
நிதிமூலதனத்தின் ஏற்பட்ட இந்த நெருக்கடியே -
தமிழ் ஈழத்திற்கும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. சிலர்
தர்க்கிப்பார்கள் பிரச்சினை வேறொன்றுமில்லை இது
தமிழ் மக்களின் மீது J.R. இற்கு ஏற்பட்ட தனிப்பட்ட
காழ்ப்புணர்ச்சியே யொழிய வேறொன்றுமில்லை. இது
இலங்கையின் எல்லையில் வெடித்ததென்பார்கள். பிரச்சனை
அதுவல்ல. மனித நேயமற்ற முதலாளித்துவ இலாபம் கருதும்



உற்பத்திமுறையால் ஏற்பட்ட நெருக்கடிக்கும் தமிழ் ஈழக்
கோரிக்கைக்கும் ஏதாவது தொடர்பு உண்டா, இல்
லையா? என்பதே பிரச்சனையாகும். தமிழ் ஈழக் கோரி-
க்கையை தோற்றுவித்த ஆணிவேர் ஏகாதிபத்தியமும்,
அதன் கூறுகளான நிதிமூலதனங்களும் தான். இதை-
விளங்கிக் கொள்ளாத எவராலும் தமிழ் ஈழம் அடைப்ப-
தற்கான நுனியைக்கூட தெளிவாக பார்த்து விடமுடி-
யாது.

I. தமிழ் மக்கள் கர்ச்சிப்பார்கள் தமிழ் ஈழத்திலிருந்து
பொலிஸையும், ஆமியையும் வெளியேற்றி விட்டால்
எமது பிரச்சனை தீர்ந்துவிடுமென்பார்கள்.

II. அங்கிருந்து பொலிஸையும், ஆமிக்காரரையும் வெளி-
யேற்றிவிட்டு, போராட்டத்தின் பின் தேர்தல் வை-
த்து அதில் யாருக்கு தகுதியுண்டோ அவர் ஆட்சி
புரிந்தால் சரி என்பார்கள்.

III. அன்றேல் தமிழ் ஈழத்திற்கு பதிலாக J.R. ஏதாவது
தந்தால் அமக்குச் சரி என்பார்கள்.

IV. மாவட்ட சபை வந்தால் தமிழ் மக்களின் பிரச்சனை
தீர்ந்து விடுமென்பார்கள்.

V. மாநில சுயாட்சி தந்தால் தமிழ் மக்களுக்கு பாலும்,
தேனும் ஓடுமென்பார்கள்.

VII. எல்லோரும் பேசாமல் இருந்தால் அமிர்தலிங்கம்
எல்லாம் செய்வாரென்பார்கள்.

VII. சிலர் கூறுவார்கள் தந்தை செல்வாவிற்குப் பின்-
அமிர்தலிங்கம் தான் தமிழ் ஈழப் போராட்டத்தை
பிழைக்கச் செய்து விட்டார். செல்வா இருந்திருந்தால்
தமிழீழம் கிடைத்திருக்குமென்பார்

VII. இன்றைய பக்கத்தில் மார்க்சிய, லெனினிசத்தோடு, செல்-
வநாயகவிசம் சேர்ந்த சாம்பாராகி திட்டமிட்டால்
தமிழ் ஈழம் கிடைத்து விடும் என்பார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

IX. தமிழ் ஈழத்திலிருந்து பொலிசையும், ஆமியையும் வெளியேற்றியபின், தோட்டத்தொழிலாளர்களை வடக்கு-கிழக்கில் குடியேற்றி சோசலிச வேலைத்திட்டத்தை நிர்மாணிக்கலாம் என்பார்கள்.

X. இப்போது தமிழீழத்திலிருக்கும் C.I.D. பொலிசுகளை கொன்று விட்டோம், இனி பொலிசையும் இராணுவத்தையும் வெளியேற்றினால் சரியென்பார்கள்.

இப்படியான தர்க்கங்களை குதர்க்கங்களை சொல்லும் எல்லாம் சேர்ந்த சாம்பாராய் இன்று தமிழ் மக்கள் உள்ளனர். பிரச்சனை ஏதோ இருக்க அதன் பக்கம் பார்வையை திருப்பாது மறுபக்கத்தில் சக்தியை செலவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். தமிழ் ஈழம் அமைக்க வேண்டும் அங்கு தொழிற்சாலைகள் போட வேண்டும் பொருளாதார செழுமையை உண்டாக்க வேண்டும். தமிழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும். முதலாளித்துவ நாடுகளிலுள்ள அதீத தொழில்நுட்பத்தினூடாக தமிழ் ஈழத்தில் நவீன தொழில்நுட்பங்களை எப்படி உருவாக்குவது என்பதே இன்றுள்ள பிரச்சனையாகும். இதனாலேயே உலகில் எல்லாப்பாகங்களையும் தொழில்மயமாக்க விடாமல் தடுக்கும், நம்மையெல்லாம் ஒடுக்கும் நிதிமூலதனத்தை அழிக்க எவ்வாறு தயாரிப்பது என்பது தான் குறிக்கோளாக அமைய வேண்டும்.

இன்று இராணுவ பூதங்களாக வளர்ந்து விட்ட நிதி மூலதனங்கள் இவ்வுலகின் வர்க்கப்பிரச்சனைக்கும் இனப்பிரச்சனைக்கும் ஆணிவேராகவுள்ளது. தமிழ் ஈழப்பிரச்சனையும் அங்கிருந்தே தோற்றுவிக்கப்பட்டது. எங்கிருந்து எமது பிரச்சனை ஆரம்பமானதோ அங்கிருந்து தயாரித்தால் மாத்திரமே தமிழ் ஈழப்பிரச்சனையை தீர்க்கலாம். மூலதனத்தை பாதுகாக்க உலகையே விழுங்கும் அணுவிந்த ஆயுதப்படைகளையும் நவீனகரமான ஆயுதங்களையும் ஏற்படுத்தி விட்ட இந்நேரத்தில் அதை வென்றுகொள்ளத்தக்க வகையில் உயர்ந்த மட்ட அரசியலையும், சர்வதேசத் தொடர்பையும், உலகத்தொழிலாள வர்க்கத்தையும் எமது போராட்டத்திற்கு ஆதரவாக்க வேண்டும்

எமது போராட்டம் மூலதனத்திற்கெதிரான போராட்டம், ஏகாதிபத்தியத்திற்கெதிரான போராட்டம், சியோனிசத்திற்கெதிரான போராட்டம், சோவனிசத்திற்கெதிரான போராட்டம் இவைகளே உலகத்தின் பிரச்சனைகளை ஏற்றுமதி செய்யும் ஆணிவேர். தமிழ் ஈழப் போராளிகள் அதன் பக்கம் திசை திரும்பி போராட்டத்தை இதற்கெதிராக தயாரிக்காவிடில் தமிழ் ஈழம் என்பது வெறும் வாய்ப்பேச்சுகளில் தான் அமையும்.

## எண்ணம்.. எண்ணம்.. எண்ண

வாசக நேயர்களே!

அபிவிருத்தி அடைந்துவரும் புரட்சிகரத் தயாரிப்பினூன் தமிழீழ சர்வதேச சம்பந்தக் குழு நிதிப்பற்றாமையால் கஷ்டப்படுவதோடு, எமது நிதி வழங்குனர் மற்றைய ஒத்திப்போட முடியாத புரட்சிகரத் தயாரிப்புகளுக்கும் பாவிக்க வேண்டியுள்ளது.

எனவே **எண்ணம்** ஏட்டிற்கு இதுவரை சந்தா அனுப்பத் தவறியோருக்கு **எண்ணம்** தொடர்ந்து அனுப்பப்பட மாட்டாது என்பதை மிகவும் மன வருத்தத்துடன் தெரிவிக்கின்றோம்.

www.tamilarangam.net

# முதலாளித்துவம் ஏன் நெருக்குவாரத்தில்

"வெட்கம் கெட்ட வேலை" எனச் சிலர் சொல்லக் கூடும். இதையே நாம் முதலாளித்துவம் அந்திம கால நெருக்குவாரத்தில் நுழைந்துவிட்டதன் அறிகுறிகள் என்கிறோம். பிரேசிலில் பசிக்கொடுமை தாங்கமாட்டாத மக்கள் கடைகளைத் தாக்கி உணவுப் பொருட்களை பிடுங்கிச் சென்றுள்ளனர். பிரேசிலின் தலைநகரமான SAO PAULOவில் 16 கடைகளைத் தாக்கிய 1,000 பிச்சைக்காரர்களை பொலிசார் குண்டாந்தடிப் பிரயோகம் நடத்தியதன் மூலம் அடித்துக் கலைத்தனர். இத் தாக்குதலில் JOSE FRANCISCO FERREIRA CONTEIRO என்ற 36 வயதுள்ள வேலையற்ற மனிதன் பொலிசாரினால் அடித்துக்கொல்லப்பட்டான். "பசிவந்தால் பத்தும் பறக்கும்" என்றான் கவி. பத்தாவதாக மானத்தையும் பறக்கவிட்டு உணவு திருடப் போனவனுக்கு முதலாளித்துவ அரசு கொடுத்த பரிசு — சாவு. உலகின் மிகக்கூடிய கடன் சுமையுள்ள நாடான ($100 பில்லியன் வெளிநாட்டுகடன்) பிரேசிலில் இந்த வருட இறுதியில் மேலும் 25 இலட்சம் மக்கள் பசியினால் மடிவர் என்பதை சர்வதேச நாணய சபையே ஒப்புக்கொண்டுள்ளது. இன்று ஒவ்வொரு பிரேசில் குடிமகனும் வெளிநாட்டு வங்கிக்கு $800 கடனாகியுள்ளான்.

சிலியிலே 1.5 மில்லியன் குடும்பங்கள் வீதிகளில் வானமே கூரையாக வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். தலைநகரான SANTIAGOவை விட்டு தென் பகுதியான LAS MALVINASல் உள்ள தரிசான நிலங்களுக்கு குடி பெயர முற்பட்ட பல குடும்பங்களை பொலிசார் தாக்கினர். மூவர் படுகாயமடைந்ததுடன் 23 பேர் சிறைபிடிக்கப்பட்டனர்.

தாட்சர் அரசாங்கத்திற்கு மேலும் ஒரு மரண அடி! ஆர்ஜன்டீனாவை அடக்கி பத்திரகாளி வேடம் பூண்ட மார்கிரட் தட்சரின் சூலத்தை றேகன் நிர்வாகம் மீண்டும் தட்டிப்பறித்தாகி விட்டது. ஆர்ஜன்டீனாவின் புதிய ஜனாதிபதியும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மிகவும் விருப்பத்திற்குரியவருமான RAUL ALFONSIN அரசிற்கு றேகன் நிர்வாகம் ஆயுத உதவிகளை மீண்டும் வழங்கப் போவதாக அறிவித்து விட்டது. றேகன் நிர்வாகத்தின் ஆர்ஜன்டீனா மோகத்தில் முகம் சுளித்துக் கொண்டு ஐரோப்பிய பொதுச் சந்தைக்கு புயல் வேகத்தில் வந்த பிரிட்டனுக்கு அங்கே £457 உதவி நிதி மறுக்கப்பட்டது. இதனால் ஆத்திரமுற்ற பிரிட்டன் ஐரோப்பிய பொதுச்



சந்தையின் 1984ம் ஆண்டிற்கான பட்ஜெட்டினை ஒரேயடியாக நிறுத்த எடுத்த முயற்சியும் 2:1 என்ற வீதத்தில் தோற்கடிக்கப்பட்டது. அடுத்த மார்ச் மாதம் மீண்டும் கூடும் போது £457 மில்லியன் உதவி நிதியானது கிடைக்காத பட்சத்தில் ஐரோப்பிய பொதுச் சந்தைக்கான பிரிட்டனின் வருடாந்த நிதியானது நிறுத்தப்படும் என பிரிட்டன் சிவப்பு விளக்குக் காட்டியுள்ளது. பிரிட்டனில் தொழிற் புரட்சி ஏற்பட்ட பின்னர் முதல் முறையாக 1983ம் ஆண்டு இறக்குமதியானது ஏற்றுமதியைவிட £1,127 மில்லியனால் கூடி விட்டது. வீழ்ந்து செல்லும் எண்ணெய் விலையினால் பாதிப்புற்று வரும் பிரித்தானியாவின் ஸ்டேர்லிங் பவுண்டானது பிரித்தானிய பொருளாதாரத்தை மேலும் ஆட்டம் காண வைத்துள்ளது.

உலகின் செல்வந்த நாடுகளில் ஒன்றான சவூதி அரேபியாவுக்கு கடினமான காலம். எண்ணெய் ஏற்றுமதி நாடுகளிடையே ஏற்பட்ட குத்து வெட்டுகளின் காரணமாக எண்ணெய் விலை வீழ்ச்சியடையவே சவூதி அரேபியாவின் வருமானம் 54.5% ஆல் வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால் சர்வதேச சீரமைப்பு வங்கியில் (BANK FOR INTERNATIONAL SETTLEMENT) தனது பங்கிலிருந்து $10.2 பில்லியனை அது மீளப் பெற்றுக் கொண்டுள்ளது. இதனால் சர்வதேச சீரமைப்பு வங்கி மேலும் பெரிய பண நெருக்கடியில் சிக்கிக்கொண்டுள்ளது. ஈரான், ஈராக் போரிலே ஈராக்கிற்கு பண உதவி செய்யவும் சவூதி அரேபியாவுக்கு பெரும் தொகை பணம் தேவைப்படுகின்றது. கடந்த ஒக்டோபர் மாதத்திலிருந்து தனது வர்த்தகக் கடன்களுக்கான வட்டியை செலுத்த முடியாத சிக்கலினுள் புகுந்து விட்ட பிலிப்பைன்ஸ் அரசாங்கம் ஒரு ஆச்சரியமான உண்மையை வெளியிட்டுள்ளது. இவ்வளவு காலமாக தனது வெளிநாட்டுக் கடன் $18 பில்லியன் எனக் கூறிவந்த பிலிப்பைன்ஸ் அரசானது கடந்த டிசம்பர் மாதம் தனது வெளிநாட்டுக் கடன் $25 பில்லியனாகும் என அறிவித்துள்ளது. மத்திய வங்கி கவர்னரான JAIME LAYA இதுநாள் வரை கணக்குப் பார்ப்பதில் ஏற்பட்ட சிக்கலின் காரணமாகவே பிழையான கணக்கு வெளியிடப்பட்டதாக சர்வதேச நாணய சபையிடம் கூறியுள்ளார். டொலருக்கு 8.4 PESO என்ற வீதத்திலிருந்து இன்று டொலருக்கு 14 PESO என்ற வீதத்தில் சடுதியாக சரிந்த போதும் பிலிப்பைன்ஸ் நாணயம் மேலும் பல பொருளாதார நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ள இவ்வேளையிலேயே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கல்வி மந்திரியான CORPUZ பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி மார்க்கோஸ் [illegible] னை உலகின் பிரபல கொள்ளைக்காரரான "MAFIA" பாதுகாக்கின்றது எனக் குற்றஞ் சாட்டியதுடன் தனது பதவியையும் ராஜினாமா செய்தார்.

தொடர்ச்சியான விலைவாசிக்கெதிராக தொழிலாளர் 48 மணித்தியால வேலை நிறுத்தப் போராட்டத்தை நடாத்தியதன் மூலம் பொலிவியாவில் ஆட்சியதிகாரத்தை ஆட்டம் காண வைத்துவிட்டனர். பாராளுமன்ற செனட் சபையில் விலைவாசியுயர்வுக்கெதிரான கேள்விகள் அரச தரப்பின் மீது பாயவே பொலிவியன் அரசாங்கம் கடந்த டிசம்பர் 15ம் திகதி ராஜினாமா செய்துள்ளது.

இவ்வாறாக சர்வதேச முதலாளித்துவமானது ஒவ்வொரு நாட்டிலும் தாங்கொணாப் பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து தமது இராணுவப் பலத்திலேயே ஆட்சி நடத்திக்கொண்டிருக்கும் வேளையிலே உலகின் பிச்சைக்கார நாடுகளில் ஒன்றான இலங்கையின் வரவு செலவுத் திட்டம் பாராளமன்றத்திற்கு வந்தது. இலங்கையின் வரலாற்றில் மிகக்கூடியளவு துண்டு விழும் தொகையை - 2,315 கோடி 96 இலட்சம் ரூபா (இது 1973ம் ஆண்டு N.M. பெரேரா சமர்ப்பித்த துண்டு விழும் தொகையைப்போல 10 மடங்காகும்)

ரொனி டிமெல் மீண்டும் அபிவிருத்தி பற்றி பிதற்றியுள்ளார். சமீபத்தில் தமிழ் மக்களது இனப்படுகொலைகளுக்கு காரணமாகிய அரசாங்கம் இவ் இனப்படுகொலைகளின், இனக்கலவரத்தின் அழிவுகளை ஈடு செய்ய "புனர் நிர்மாணம்" என்ற பெயரிலே மேலும் வரிகளை தொழிலாளர் தலையில் சுமத்தியுள்ளது.

இதன் பிரகாரம் அரசாங்க தொழிலாளர்கள் 1% ஐயும் தனியார் தொழிலாளர் 10% "புனர் நிர்மாண" வரியாக செலுத்த வேண்டும்.

தபால் சேவை, தொலைபேசி, பாஸ்போட் கட்டணம் மற்றும் இத்தியாதி சேவைகளின் கட்டணத்தை மேலும் கூட்டியுள்ள அரசாங்கமானது தமிழ் ஈழப் போராட்டத்திற்கு முகம் கொடுக்கவும், தென்னிலங்கைத் தொழிலாள வர்க்கத்தின் நாளைய சுவாலைக்கு முகம் கொடுக்கவும், இராணுவ செலவினங்களுக்கு மேலதிகமாக 18 கோடியே 97 இலட்சத்து 55 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இது சென்ற ஆண்டு ஒதுக்கீட்டை விட 36% கூடியதாகும். கடந்த இனக்கலவரமானது சிறு கைத்தொழில்துறை மூலதனத்தின் 200 கோடி ரூபாவை சாம்பலாக்கி 110,000 தொழிலாளர்களின் வேலைக்கு ஆப்பு வைத்த நிலையிலும், 50% க்கு மேலான வேலையின்மைக் [illegible]



யிலும் 50 பில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட வெளிநாட்டுக் கடனுள்ள நிலையிலும், இதற்குரிய வட்டித் தொகை ஏற்றுமதியால் மட்டும் தொகை முழுவதுமாக முழுங்கி ஏப்பம் விடும் நிலையிலும் மேலும் மேலும் அபிவிருத்தி பூச்சாண்டிகளோ, வேலைவாய்ப்பு பூச்சாண்டிகளோ மக்களை ஏமாற்ற முடியாத காலம் வெகு சீக்கிரம் வந்துவிட்டது.

இராணுவ அதிகாரம் பெற்ற ஜயவர்த்தனா அரசாங்கத்திலே, சர்வதேச முதலாளித்துவத்துடன் நீக்கமற நெருக்கமுற பின்னிப் பிணைந்துவிட்ட ஜயவர்த்தனா அரசாங்கத்தினால் இலங்கையை அபிவிருத்தி செய்ய முடியாது என்பது தெளிவாகிவிட்ட இந்த நிலையிலே மாவட்ட சுயாட்சியென்ற வடிவில் வரும் சதித்திட்ட சுயாட்சியானது தமிழ் மக்களது வேலைவாய்ப்புப் பிரச்சனைக்கோ, பல்கலைக்கழகப் பிரச்சனைக்கோ, சாப்பாட்டு பிரச்சனைக்கோ, வீட்டுவசதிப் பிரச்சனைக்கோ, நோய் நொடிப் பிரச்சனைக்கோ, உடுப்புப் பிரச்சனைக்கோ தீர்வாகமாட்டாது. மாவட்ட அபிவிருத்தி சபைகள் எவ்வாறு வெற்றுவேட்டுகளாகப் போயினவோ அவ்வாறே மாவட்ட சுயாட்சியிலும் அபிவிருத்தியென்பது வெற்று வேட்டுமே. அமிர்தலிங்கத்தின் தலைமையில் வரும் மாவட்ட சுயாட்சியின் கீழ் கைப்பெட்டித் தொழிற்சாலை அபிவிருத்தி மட்டுமே அடங்கும் என்பதை சர்வதேச முதலாளித்துவத்தின் நெருக்குவாரத்தோடு சார்பு ரீதியாக புரிந்து கொள்வோம்.


கொலையா! தற்கொலையா! விபத்தா!

மேற்கு ஜேர்மனியின் பேர்லின் சிறையில் 3 தமிழர்களும், ஒரு லெபனியனும், ஒரு பலஸ்தீனரும், ஒரு துனிசியனும் தீயினுள் கருகி மாண்ட சம்பவம் 1.1.84 இல் நடைபெற்றது. இவ் அறுவரும் ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட இருந்தவர்களாகும். சிறையில் எவ்வாறு நெருப்பு வந்தது பற்றிய தகவல்கள் கிடைக்கவில்லை. சிறைக்கதவுகள் உட்தாள்பாள் போடப்பட்டிருந்தமையால் தம்மால் காப்பாற்ற முடியவில்லையெனப் பொலிசார் தெரிவித்துள்ளனர். இப்பத்திரிகை அச்சேறும்வரை மேலும் விபரங்களை எம்மால் திரட்ட முடியவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# INDIAN WOMEN OF BRITISH INDIA .1922

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்